


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர் வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhovel 18A
47249 Duisburg-Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்:
Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

சர்வதேச மகளிர் தினம்

உலகம் முழுவதிலும்
கொண்டாடப்படும் மகளிர் தினம்,
முதன் முதலில், 1911 ஆம் ஆண்டு
மார்ச் 8ஆம் திகதி அன்று
அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.
எனவே மகளிர் தினம் கொண்டாட
ஆரம்பித்து இந்த வருடத்துடன்
104 வருடங்கள் ஆகின்றன.பெண்
விடுதலை உலகளாவிய ரீதியாகக்
கிடைக்க வேண்டும், பெண் சுயமாக
இயங்கச் சுதந்திரம் கிடைக்க
வேண்டும். பெண் இப்படித்தான்
வாழ வேண்டுமென்று வீட்டுக்குள்
நடைமுறைப்படுத்தப்படும் எழுதாத
சட்டங்கள் அழித்தொழிக்கப்பட
வேண்டும்.

பெண்ணை இறுகப்
பற்றியிருக்கும் கண்ணுக்குத்
தெரியாத, ஆனால் பெண்ணின்
உயிரையும் உள்ளத்தையும்
வதைக்கின்ற அத்தனை
விலங்குகளும் உடைத்தெறியப்பட
வேண்டும் என்பதே இந்தச்
சர்வதேச மகளிர் தினத்தின்
தொனிப்பொருளாக அமைந்துள்ளது.
பெண்களுக்கெதிரான
பாரபட்சங்களையும்
வன்முறைகளையும் ஒழிப்பதற்கான
அனைத்துலக உடன்படிக்கை
இலங்கையில் 1981லேயே
ஏற்றுக்கொண்டிருக்கிறது.
பாலியல் தொல்லை,
தாக்குதல் முதலியவை
1995, 1998 ஆண்டுகளில்
மேற்கொள்ளப்பட்ட குற்றவியல்
சட்டத்திருத்தங்கள்மூலமா
ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும்
பெண்கள் தொடர்ந்தும் பலதரப்பட்ட
வன்முறைகளுக்குள்ளாகி
வருகின்றனர்

பெண்கள்முகம்கொடுக்கும்
பிரச்சினைகள், எதிர்கொள்ளும்
சவால்கள்,பலதரப்பட்டன
வாகவுள்ளன. நமது நாட்டில்
பெண்களுக்கு எதிராக
மேற்கொள்ளப்படும் கொடுமைகளை,
துன்புறுத்தல்களை, பாலியல்
ரீதியான வன்முறைகளை
அன்றாடத் தினப்பத்திரிகைகளில்
படிக்கும்போது மனிதநேயம்
கொண்டவர்களது நெஞ்சம்
பதறுகிறது. பெண்கள் வெளியே
போகும்போது, வேலைத்தலங்களில்,
பணியாற்றும் இடங்களில்,
ஏன்பாடசாலைகளில் கூட பாலியல்
வன்முறைகளுக்கும் பலவிதமான
வன்முறைகளுக்கும்
ஆளாகிவருகின்றனர். வீட்டு
வன்முறைகளுக்கும் குறைவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அக்கிரமங்கள் அநீதிகள், பத்திரிகைகளில் செய்திகளாகும்போது பாலியல் பலாத்காரம் பற்றிய விவரணம் வெளியிடப்படும்போது அவை சித்திரிக்கப்படும் விதம், இடப்படும் தலையங்கம், பயன்படுத்தப்படும்மொழிப்பிரயோகம் ஆகியவை பணம்பண்ணும் நோக்கம் கொண்டவையாக பலாத்காரத்தை ஊக்குவிப்பதாக அமைந்து வருவதைக்காண்கிறோம்.பெண்களின் போகத்தன்மையை ஆண்பார்வையில் அணுகுவதும், பாலுணர்வு முலாம்பூசி பெண்களின் உணர்வுகளை மலினப்படுத்துவதும் இன்று ஆக்க இலக்கியங்களில் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. திரைப்படங்களிலும் தொலைக்காட்சியிலும் இவை உச்சக்கட்டத்தில் உள்ளன. யுத்தத்தின் தாக்கம், இயற்கை அனர்த்தம், மற்றும் குடும்பச்சூழல் என்பனவும் பெண்சமூகத்தைப் பெரிதும் பாதிக்கின்றன.சமூகக் கட்டமைப்பிலிருந்து பெண்விடுதலை பெறுவது ஒரு தனித்த செயல் அல்ல. இது முழச் சமூகத்தோடும் இணைந்து போராடவேண்டிய செயற்பாடு என்பது உணரப்படவேண்டும்.

கல்வி அறிவுள்ள நகரங்களில் வாழும் பெண்கள் மத்தியில் மாத்திரம் அல்ல கிராமப்பகுதிகளிலும் மலையகத் தோட்டப்பிரதேசங்களை வாழ்விடமாகக் கொண்ட கல்வியறிவு குறைந்த அடிநிலைமக்களிடத்திலும் விழிப்புணர்வு ஏற்படும் பொழுதே பெண்களுக்கெதிரான வன்முறைகளும் இழிசெயல்களும் ஓரளவுக்கேனும் குறைய வாய்ப்புண்டு என்பதை சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் இவ்வேளையில் வலியுறுத்திக்கூற விரும்புகிறோம்.

ஆசிரியர்

# மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா

## 02-05-2015 சனிக்கிழமை டியூஸ்போர்க்கில்

Centrum Westende
Wetender Str 30
47138 Duisburg-Meiderich

## அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## காப்பது விரதம்..

ஆகஸ்டு 15ம் திகதி இந்தியாவின் சுதந்திர தினம். நாம் வெள்ளையரின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற நாளாகும். இந்திய நாடு இந்தியர்களுக்குச் சொந்தமாகிய நாளாகும். இந்த நாளில் நாம் ஒரு உறுதி - சபதம் எடுத்துக் கொள்ளவேண்டும்."நான் பிறந்த மண்ணிற்குப் பெருமை தரும் செயல்களையே செய்வேன்" அண்டை அயலாரை நேசிப்பேன்" இப்படி ஒரு தீர்மானத்தைச் செய்து கொண்டால் மட்டும் போதாது. அதைக் காப்பாற்ற வேண்டும். இப்படி நாம் மேற்கொண்ட ஒரு காரியத்தை மறக்காமல் செய்வதையே விரதம் என்பார்கள். விரதம் என்றால் நோன்பு என்றும் பொருள்படும். ஆகவே ஒரு காரியத்தைச் செய்வதாக முடிவு செய்துகொண்டாயானால், விரதம் மேற்கொண்டாயானால் அதைக் காப்பாற்றவேண்டும். கைவிடக்கூடாது. இதைத்தான் ஔவைப்பாட்டி நறுக்குத் தெறித்தாற்போலச் சொல்லுகிறார்.

## கிழமைப்படவாழ்..

உன்னையே எல்லோரும் விரும்ப வேண்டுமா, பாராட்ட வேண்டுமா?.. அப்படியானால் நீ உன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவ வேண்டும். தேவைப்பட்டவர்களுக்கு, உன் சக்திக்கு ஏற்ப கொடு. உறவினர் என்றில்லாமல் நண்பர், ஊரார்,, ஏழைகள், இயலாதோர் எல்லோருக்கும் நீ உபகாரியாக இருந்தாயானால் உன்னை எல்லோரும் பாராட்டுவார்கள். உன் நல்ல குணத்துக்காகப் போற்றுவார்கள். உன்னுடன் அன்போடு, பரிவோடு, பாசத்தோடு பழகுவார்கள். இப்படி எல்லோருக்கும் உரிமையுடையவனாக வாழ்வதுதான் வாழ்க்கை. உடலாலும் உள்ளத்தாலும், உடமையாலும் பிறருக்கு நன்மைசெய்து வாழவேண்டும். இதையே ஆத்திசூடி கிழமைப்பட வாழ் என்கிறது. கிழமை என்பது வாரத்தின் நாட்களை மட்டுமல்ல உரிமை என்றும் பொருள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்கள் மாறவேண்டும்...

வாழ்க்கையில் வசதி வாய்ப்புக்கள் பெருகப்பெருக பல வழிகளில் மாற்றங்களும் ஏற்படுகின்றன. பொருளாதாரம், கல்வி, பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் சில வரவேற்கத்தக்கவையாகவும் இருக்கின்றன. சில மாற்றங்கள் விரும்பத்தக்கவையாகவும் இருக்கின்றன. அந்த வகையில் இந்த நாகரீக மாற்றம் பெண்களின் பண்பாடு, கலாச்சார என்பவற்றில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அளவுக்கதிகமான கணனி, கைத்தொலைபேசிப் பாவனை, கலாச்சாரத்திற்கு ஒவ்வாத ஆடைகள் அணிவது, தொலைக்காட்சி சின்னத்திரைகளிலுள்ள மோகம், வரையறையற்ற ஆண் நண்பர்களின் சகவாசம் என்று பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

அடுத்து அனேகமானோர் பெண்கள் மீது அவர்கள் அணியும் ஆடைகளைப் பற்றிக் குறை கூறுகின்றனர். உண்மையில் இது மறுக்க முடியாதது. திருமணமான பெண்கள், மணமாகாத பெண்கள் என்ற வேறுபாடின்றி பார்ப்போரைச் சங்கடப்படுத்தும் ஆடைகளை அணிகின்றனர். இதனை இவர்கள் நாகரீகம் என நினைக்கலாம். ஆனால் அது நமது பண்பாட்டையே சிதைக்கிறது என்பதை இவர்கள் புரிந்து கொள்வதே இல்லை.. தவறான நபர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதும், ஒருசிலர் பிள்ளைகளை விட்டுவிட்டு ஓடிப்போய் வாழ்வை ஏற்படுத்திக்கொண்ட பெண்களும் இன்று இருக்கின்றனர். இவையெல்லாம் நமது பண்பாட்டுக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் செயல்களாகும்..

மாற்றங்கள் வேண்டும்..ஆனால் அவற்றைச் சரியான செயல்களுக்கு மட்டும் பயன்படுத்தினால் வாழ்க்கை இனிக்கும். இவ்வாறில்லாமல் "நான் இப்படித்தான் நடந்து கொள்வேன்" என்று முரண்பட்டால் நாளை அழிவது பெண் இனத்தின் வாழ்வுதான் என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும். மாற்றம் என்பது மனதில் இருந்தால் போதும். நாமும் நிட்சயமாய் மாறவேண்டும் என்ற கட்டாயமில்லையே!..

செல்விகயுகேந்தினி.
நீந் மிஷின் – கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பிடாதே..

ஓர் ஊரிலே ஒரு துறவி இருந்தார். அவரிடம் ஒரு மாற்றுத்துணிகூட இல்லை. இருந்த உடையும் கிழிஞ்சலாக இருந்தாலும் நேர்த்தியாகச் சரி செய்யப்பட்டிருந்தது. அவரைப் பார்க்கவும், பேசவும், ஆசி பெறவும் பொது மக்கள் அலை..அலையாகத் திரண்டு வந்தனர். கூட்டத்தில் மிகப் பெரும்பாலானோர் அந்தத் துறவியின் கால்களைத் தங்கள் கைகளினால் தொட்டுக் கண்களினால் ஒற்றிக்கொண்டனர். துறவியின் புகழ் ஊரெங்கும் பரவியது. இது மெல்ல..மெல்ல அரண்மனைவரை சென்றுவிட்டது. இந்தத் துறவியைப் பற்றி அந்த நாட்டுத் தளபதி கேள்விப்பட்டான். அவனுக்கு எரிச்சலாக இருந்தது.

உடனடியாகத் தான் அந்தச் சாமியாரைக் கண்டிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். அவன் கண்டிக்க நினைத்ததற்கு வேறு காரணமும் இருந்தது. தான் நாட்டிலே முக்கியமானவன் தனக்கு அப்படிப்பட்ட புகழ் வாய்க்காமல் கேவலம் ஒரு சன்னியாசிக்கு இப்படிப்பட்ட புகழ் கிடைத்துள்ளதே.. என்று பொறாமைப்பட்டான். அவன் அன்றைய தினமே அந்தத் துறவியைக் காண்பதற்குச் சென்றான்.தளபதி வருகிறார் என்றவுடன் துறவியைச் சுற்றியிருந்த கூட்டம் வழிவிட்டு ஒதுக்கி நின்றது.

துறவியை மேலிருந்து கீழ்வரை உற்று நோக்கினான் தளபதி. நான் இந்த நாட்டின் தளபதி. விதம் விதமான ஆயுதப்பயிற்சிகளைப் பெற்ற பல்லாயிரக் கணக்கான போர் வீரர்களும் என்னிடம் இருக்கிறார்கள். நான் அரண்மனைக்குள் நுழைந்தால், தெருவில் நடந்தால் எல்லோரும் என்னைத் தெய்வம் போலக் கருதிக் கை எடுத்து வணங்குவார்கள். ஆனால் பிச்சைக்காரனைப்போலத் தோற்றமளிக்கக்கூடிய, அடுத்தவேளை சாப்பிடக்கூட இல்லா உன்னை ஒரு பொருட்டாக மதித்து, அதிக மரியாதை கொடுத்துக் காலில் விழுந்து வணங்கிச் செல்கிறார்ககள். "அதுதான் ஏன்?.. எதற்காக என்று எனக்குப் புரியவில்லை" என்றான்.

அவனுடைய பேச்சை ரசித்துக்கேட்ட அந்தத் துறவி அவனை அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்குப் பின்புறமாக இருந்த பூந்தோட்டத்திற்கு வந்தார். அதில் வண்ண..வண்ண மலர்கள் மலர்ந்தன அன்றைய தினமே பௌர்ணமியானதால் முழு நிலவு தன் வெளிச்ச முகத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. வானத்தில் ஒளிரும் நிலவைச் சுட்டிக்காட்டி "அது என்ன? என்று கேட்டார் துறவி " அதுவா அது நிலவு" என்றான் தளபதி. பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவி தன் அருகே பூத்திருந்த ஒரு மலரைச் சுட்டிக்காட்டி " இது என்ன?" என்று கேட்டார்.. தளபதி எரிச்சல் அடைந்தான். இருந்தும் அதை வெளிக்காட்டாமல் இது ரோஜாப்பூ என்றான். இந்த ரோஜாப்பூ என்றைக்காவது ஒரு நாள் அந்த நிலவைப்பார்த்து, ஆஹா.. இந்த நிலவு எத்தனை அழகு.!.. இதைச்சுற்றி எவ்வளவு ஒளி வெளிச்சம்!..நான் இந்த நிலவைப்போல் அவ்வளவு வெண்மையாக இல்லையே என்று ஒப்பிட்டுப் பார்த்ததுண்டா இல்லையல்லவா.

அதே போல அந்த நிலவு இந்த ரோஜா மலரைப் பார்த்து நாம் இந்த ரோஜா மலரைப் போன்று நிறத்தில் இல்லையே!..மிருதுவாக இல்லையே என்று வருத்தப்பட்டதுண்டா. இல்லையே ரோஜாப்பூவின் அழகு ஒரு விதமானது என்றார்.. துறவி சொன்னதைக் கேட்டதுடன் தளபதியின் கண்கள் கலங்கின. தங்களை மரியாதைக் குறைவாக நடத்தியதற்கு வருந்துகிறேன் தறைவியே!.. என்னை மன்னிக்க வேண்டும்!.. என்று அவர் கால்களில் விழுந்து வணங்கினான் தளபதி!..

செல்வி விதுர்ஷா
ரூத் மிஷன் - கிளிநொச்சி.

காதலர்தினப் பரிசு: -

கடந்த 14-02-2015 அன்று உலகம்பூராவும் காதலர்தினம் களைகட்டப் பல நாடுகளில் இத்தினம் என்னவென்றே தெரியாமல் பல லட்சம் பெண்கள் வறுமையிலும் அடிமையிலும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். காதலர் தினத்தன்று ஜேர்மனியில் பரிசுப்பொருட்கள், பூ வகைகள், குடிபானங்கள், இனிப்பு, சொக்லேட்வகைகள் என அன்றைய தினம் மட்டும் 120 மில்லியன் யூரோவிற்கு விற்பனை இடம்பெற்றதாகப் பத்திரிகைச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்..

சங்க காலத்தில் இயற்றப்பட்ட நூல்களைப் 'பாட்டும் தொகையும்' என்று குறிப்பிடுவர். பாட்டு' என்பது பத்துப்பாட்டையும், 'தொகை என்பது எட்டுத்தொகையையும் சுட்டும். இந்தப் பதினெட்டு நூல்களையும் பதினெண்மேற்கணக்கு என்றுங் கூறுவர்.

| பத்துப் பாட்டு நூல்கள் | எட்டுத் தொகை நூல்கள் |
|---|---|
| 01. திருமுருகாற்றுப்படை | 01. நற்றிணை |
| 02. பொருநராற்றுப்படை | 02. குறுந்தொகை |
| 03. சிறுபாணாற்றுப்படை | 03. ஐங்குறுநூறு |
| 04. பெரும்பாணாற்றுப்படை | 04. பதிற்றுப்பத்து |
| 05. நெடுநல்வாடை | 05. பரிபாடல் |
| 06. குறிஞ்சிப் பாட்டு | 06. கலித்தொகை |
| 07. முல்லைப்பாட்டு | 07. அகநானூறு |
| 08. மதுரைக் காஞ்சி | 08. புறநானூறு |
| 09. பட்டினப் பாலை | |
| 10. மலைபடுகடாம் | |

## அரபு மொழி!.

உலகில் பல நாடுகளில் அரபுமொழி தாய்மொழியாகவும் அரச மொழியாகவும் இருந்து வருகின்றது. அந்த வகையில் இந்த மொழி பேசப்படும் நாடுகளில் முன்னணி வகிக்கும் நாடுகளின் வரிசை.....ஒவ்வொரு நாட்டினதும் சனத்தொகையில்....

| | | | |
|---|---|---|---|
| கட்டார் | - 48 வீதம் | பிரான்ஸ் | - 21 வீதம் |
| பாக்கிஸ்தான் | - 35 " | அமெரிக்கா | - 21 " |
| பெல்ஜியம் | - 31 " | ஈராக் | - 20 " |
| பிரித்தானியா | - 24 " | ஜேர்மனி | - 16 " |
| துருக்கி | - 22 " | கனடா | - 15 " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகளும் விடைகளும்...

01. நிலத்தின் மேலே பச்சையாகச் சிரிப்பான் கீழே மஞ்சலாய் விளைவான்.
02. நீரில் பிறப்பான் குழம்பில் மிதப்பான் அவன் யார்.
03. குச்சித் தொப்பிக்காரன் உரசினால் கோபம் வரும் அவன் யார்.
04. பார்த்தால் கம்பு வெட்டிப் பிழிந்தால் இனிப்பு அவன் யார்.
05. பாடி அழைப்பான் உறவை. கூடி உண்பான் அவன் யார்.
06. ஒரு விளக்கில் ஊரெல்லாம் வெளிச்சம் அவன் யார்.
07. காலம் காட்டக் களைப்பின்றி ஓடுவான் அவன் யார்.
08. ஆயிரம் கண் கொண்டான் அசந்து தூங்க மடி தந்தான் அவன் யார்.
09. உயரம் கண்டால் ஏறான். பள்ளம் பார்த்தால் பாய்வான் அவன் யார்.
10. உடம்பில் வெளிச்சம் பூட்டி ஊர்வலம் வருவான் அவன் யார்.
11. எட்டிப்பிடிக்க ஆசை ஆனால் எட்டாது அது என்ன.
12. அதிகாலையில் எழும்புவான். ஆனால் படிக்கத் தெரியாதவன் அவன்யார்.
13. சொட்ட நனைந்தாலும் நடுங்க மாட்டான் அவன் யார்.
14. சடக்கென்று வருவான் சத்தமிட்டுப் போவான் அவன் யார்.
15. கொண்டையில்சிவப்புப் பூவைத்தவன்கொக்கரித்துத் திரிவான்அவன் யார்.
16. மந்திரவாதியுமல்ல தைரியசாலியுமல்ல ஆனால்தந்திரசாலி அவன் யார்.
17. ஒரு வாய் தண்ணீரை உயரத்தில் சுமப்பான் அவன் யார்.
18. மண்ணுக்குள் இருப்பான் குழம்பிலும் மணப்பான் அவன் யார்.
19. நாலு கால்கள் கொண்டவன் வீரமாகப் பேச வாயற்றவன் அவன் யார்.
20. நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட நாள் ஆயுள் அவன் யார்.

விடைகள்:-

| | | | |
|---|---|---|---|
| 01. மஞ்சள் | 02. மீன் | 03. தீக்குச்சி | 04. கரும்பு |
| 05. காகம் | 06. நிலா, சூரியன் | 07. கடிகாரம் | 08. நாட்காட்டி |
| 09. தண்ணீர்,வெள்ளம் | 10. மின்மினிப்பூச்சி | 11. வானம் | 12. சேவல் |
| 13. குடை | 14. தும்மல் | 15. சேவல் | 16. நரி |
| 17. தென்னைமரம் | 18. மஞ்சள் | 19. கதிரை | 20.செங்கல் |

செல்வி.கிரிஜா

நீத் மிஷன் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி முடிவு -159

(தை - மாசி - 2015)

1. இலங்கையின் தற்போதய ஜனாதிபதி, பிரதமரின் பெயர்களை எழுதுக..
   ஜனாதிபதி-மைதிரிபால சிறிசேன
   பிரதமர்-ரணில் விக்கிரமசிங்க.

2. சுனாமி இடம்பெற்றுப் பத்து வருடங்கள் முடிவடைந்துவிட்டன. இலங்கையில் சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நான்கு இடங்களின் பெயர்களை எழுதுக..
   மட்டக்களப்பு, களுத்துறை, காலி, முல்லைத்தீவு.

3. ஐரோப்பாவில் கடல்வளம் இல்லாத நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக.
   சுவீஸ்லாந்து, ஒஸ்த்திரியா, லக்ஸம்பேர்க், செக்குடியரசு.

4. தற்போது பனிக்காலம் அல்லவா.. உலகில் பனிப்பொழிவு மிகக் கூடுதலாகக் காணப்படும் நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக..
   அமெரிக்கா, கனடா, ஐஸ்லாந்து, ரஷ்ஷியா.

5. ஒத்தசொற்கள் / எதிர்ச்சொற்கள் எழுதுக...

| ஒத்தசொற்கள் | | எதிர்ச்சொற்கள் எழுதுக... | |
|---|---|---|---|
| தாய் | அம்மா | இனிப்பு | புளிப்பு |
| வாய்மை | உண்மை | அரசன் | ஆண்டி |
| இல்லம் | வீடு | மேல் | கீழ் |
| உடை | ஆடை | இரவு | பகல் |
| சாப்பாடு | உணவு | சூடு | குளிர் |

6. ஒரு சொல்லில் மூன்று சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.
   (உதாரணம்:- சித்திரைத்திருவிழா- சித்தி - திரை - திருவிழா)
   1. தைப்பொங்கல் - தை, பொங்கல், கல்
   2. கண்கட்டுவித்தை - கண், கட்டு, வித்தை
   3. மண்மூடைச்சுவர் - மண், மூடை, சுவர்
   4. புலம்பெயர்நாடு - புலம், பெயர், நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி - 160

## ( பங்குனி-சித்திரை - 2015 )

1. இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் அதிகமானோர் சென்று பார்க்கும் நான்கு இடங்களின் பெயர்களை எழுதுக..

-------------------- ----------------
-------------------- ----------------

2. இலங்கை வடகிழக்கில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மக்கள் வாழும் நான்கு இடங்களின் பெயர்களை எழுதுக.

-------------------- -----------------
-------------------- -----------------

3-ஐரோப்பாக் கண்டத்தில் நிலப்பரப்பில் பெரிய நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக..

-------------------- -----------------
-------------------- -----------------

4. உலக வரலாற்றில் இடம்பிடித்தவர்களில் நான்கு பேரின் பெயர்களை எழுதுக..

-------------------- ------------------
-------------------- ------------------

5. பின்வரும் சொற்களை பிழை திருத்தி எழுதுக..

அறிசி ---------- உனவு -----------வாழைப்பலம் ------------
சிருவன் ---------- தமில் -----------நூழகம் ----------------

6. ஆறு எழுத்துச் சொற்கள் ஆறு எழுதுக..

---------------- ---------------- ---------------
---------------- --------------- ---------------

7. நீங்கள் விரும்பிய திருக்குறள் ஒன்றையும் அதன் பொருளையும் எழுதுக..

முடிவு திகதி- 30-04-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு -84
## (தை- மாசி 2015)

| | | | |
|---|---|---|---|
| கா | த | லை | ர் |
| ம | ண் | ட் | ர |
| வி | ணீ | டு | வீ |
| வே | ர் | நோ | மா |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 85
## (பங்குனி - சித்திரை - 2015)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ: –

01-04 இவர்களுக்கும் உலகில் ஒரு நாள் கொண்டாடப்படுகின்றது.

10-11 இது அழிக்கப்படுவதால் மழை பொழிவது குறைவடைகின்றது.

வ – இ: –

08-05 மாணவர்கள் இதுபோட்டுச் செயற்பட்டால் அதிக பலன்தான்.

10-09 மாலை நேரம் எதிர்ச்சொல்.

கீ – மே: –

13-09 மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்துவர்

15-11 பள்ளம் எதிர்க்கருத்துச் சொல்.

16-08 வீட்டில் ஒருத்தி.

மே – கீ: –

03-11 இனிப்பான பலகாரம்

10-14 மனித உறுப்புக்களில் ஒன்று

முடிவு திகதி: **30.04.2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் போட்டி முடிவுகள்

## (தை - மாசி 2015)

### பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்.

| | |
|---|---|
| செல்வி. நந்தனா.கனகராசா | - Monchengladbach |
| செல்வி. சாதனா.தேவானந்தராசா | - Monchengladbach |
| செல்வி. மயூரி.பதஞ்சலி | - Weeze |
| செல்வி. சாதனா.பதஞ்சலி | - Weeze |
| செல்வி அபிராமி.பரமானந்தன் | - Kevelear |

| | |
|---|---|
| செல்வன். சேயோன்.கிருபாகரன் | - Oldenburg |
| செல்வன். லயகரி.பதஞ்சலி | - Weeze |
| செல்வன். ராகுல்.கனகராசா | - Monchengladbach |
| செல்வன். ஆகீசன்.சு | - Oldenburg |
| செல்வன். பரன்.பாலச்சந்திரன் | - Geilenkirichen |
| செல்வன். ஆதவன் அருமைத்துரை | - Wiesloch |
| செல்வன். பவிதன் அருமைத்துரை | - Wiesloch |

### பரிசுபெறும் அதிஷ்டசாலிகள்.

| | |
|---|---|
| செல்வன். சேயோன் கிருபாகரன் | - Oldenburg |
| செல்வன். ஆகீசன்.சு | - Oldenburg |
| செல்வன் பரன் பாலச்சந்திரன் | - Geilenkirichen |

**போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மணிகளுக்கும் பாராட்டுக்களும்..வாழ்த்துக்களும்!..தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குகொள்ளுங்கள்!... பரிசுகளை வென்றிடுங்கள்!..**

---

**நன்றிகள்!..**

**மண் சஞ்சிகையின் அட்டைப்பட கணனி வடிவமைப்பு**
**செல்வன் பானுஸ்கந்தா-புவனேந்திரன்**
Duisburg

**மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு**
**செல்வன் சிவகாந்த்-சிவராசா**
Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான வேண்டுகோள்!.

மண் சஞ்சசிகையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சிறுவர் போட்டிகளான குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடைப் போட்டி, கண்டுபிடியுங்கள் போட்டிகளில் பங்குபற்றும்மாணவர்களின் எண்ணிக்கைகுறைவடைந்துவருவதை வேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றோம் .மாணவமணிகளின்தாய்மொழிக் கல்வி,எழுத்தாற்றல், சிந்தனையாற்றல், அறிவியல் விடையங்களில் மேம்படவேண்டும் என மண்சஞ்சிகை பல ஆண்டுகளாக எடுத்துவரும் செயற்பாடுகளுக்கு நீங்கள் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கள் ஆதரவுகள் குறைவடைந்துவருவதால் இந்த மூன்று போட்டிகளையும் தொடர்ந்து நடத்துவதா!..என்னும்கேள்வி எழுந்துள்ளது. பங்குகொள்ளும' மாணவமணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் போட்டிகளை நிறுத்தவேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். எனவே அடுத்துவரும காலங்களில் போட்டிகளில்கலந்துகொள்ளும் மாணவ மணிகளின் எண்ணிக்கை குறித்து முடிவெடுக்கப்படும். ஆகவே பெற்றோர்களும் மாணவர்களும் ஆக்கமும் ஊக்கமும் எடுத்து ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிப் பயன்படும்வண்ணம் அன்போடு கேட்டுககொள்கின்றோம்!..

ஆசிரியர்

# வெள்ளி விழா!.

உங்கள் மண் சஞ்சிகை எதிர்வரும் 2015 தை மாதம் தனது 25வது ஆண்டை நிறைவுசெய்துள்ளது. வெள்ளிவிழாவை 2015 மே மாதம் 2ம் திகதி நடாத்த ஏற்பாடுகள் மேற்கொளாள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து மண் சஞ்சிகையைப் படியுங்கள். இவ்விழா பற்றிய உங்கள் கருத்துக்களை அன்போடு எதிர்பார்க்கிறோம்!...

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிஆனந்தனின் சிந்தனைகள்!...

## முகவரி...

மழை வழங்கும் வானமே நீ வாழ்க.. என்று நான்கு திசைகளும் வானத்தை வாழ்த்தின. காற்றுக்குச் சினம் பொங்கியது. என்ன கொடுமை!.. வானமா வழங்கியது. பூமிக்காகக் காற்று பொருமியது!..

"நீர் கொடுப்பதோ பூமி.. பேர் எடுப்பதோ வானம்!..

## ஒழுங்கு..

தலைமை எறும்பு கூறியது.."ஒழுங்காகச் செல்லுங்கள்...பரிசு உங்களுக்குக் காத்திருக்கிறது"ஓர் எறும்பு.."என்பாட்டில் நான் போவேன்" என்று வரிசையை உடைத்துக்கொண்டு தனிவழி போனது. சிறிது நேரத்தில்.. வரிசை குலையாது போன எறும்புகள் எல்லாம் வாயில் அரிசியோடு திரும்பி வந்தன. ஒற்றை எறும்பின் முகம் ஒடுங்கியது. நிரை குழம்பாத எறும்புகளில் ஒன்று சொன்னது

"வரிசை பிளப்பான் பரிசை இழப்பான்"

## சூடு..

இரவு புற்றிலிருந்து வெளியே வந்த ஈசல் வெளிச்சத்தைத் தன் உடலில் தூக்கிப் பறந்த மின்மினியைப் பார்த்தது. அதன் அழகைப் பற்றீசலால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "மின்மினியைப் போல் வெளிச்சத்தைத் தூக்கிப் பறக்க என்னாலும் முடியும்" என்று கூறிக்கொண்டே குடிசையில் எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கின் வெளிச்சத்தைத் தூக்கப் போனது புற்றீசல். பாவம்...ஒரு நொடியில் அது எரிந்து கருகிப் போனது.

"பொறாமை எரிந்து போகும். புற்றீசல் கரிந்து போகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

## பிறனில் விழையாமை

141. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்கண் இல்.

142. அறன்கடை நின்றபருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல்.

143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

144. எனைத்தணைய ராயினும் என்னாம் தினைத்தணையும்
தேரான் பிறனில் புகல்.

145. எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

146. பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

147. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

148. பிறன்மனை நோக்காத பேராணஇமை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு.

149. நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

150. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

பிறனது இல்லாளை விரும்பாமை

141. உலகியலின் அறம், பொருளாகிய நெறிகளை அறிந்தவனிடம், பிறன் மனைவியை விரும்பும் அறியாமை இல்லை.

142. காமமாகிய பாவத்தில் நின்றவருள் பிறன் ஒருவனின் கடைவாயிலைப் பற்றி நின்றவர்களைப் போன்ற அறிவில்லாதவர் இல்லை.

143. தம்மை ஐயுறாதவர் மனையில் பாவம் செய்வதை விரும்புபவர் உயிருடையரேனும் இறந்தவரே ஆவர்.

144. காம மயக்கத்தால் தினையளவும் ஆராயாமல் பிறருடைய இல்லத்தில் புகுதல் எவ்வளவு பெருமை உடையவராக இருந்தாலும், அப்பெருமை மதிப்பிழக்கும்

145. தனக்கு எளிதென்று கருதிப்பிறன் இல்லாளுடன் சேர்பவன் எந்நாளும் அழியாத பழியை அடைவான்.

146. பிறர் மனைவியுடன் கூடுபவனுக்குப் பகை, பாவம், அச்சம், பழி ஆகிய நான்கு தீங்குகளும் ஒருகாலும் நீங்கா.

147. அறவழியில் இல்வாழ்க்கை நடத்துபவன் பிறன் மனைவியின் பெண்மையை ஒருக்காலும் விரும்பமாட்டான்.

148. பிறன் மனைவியை மனதுள் நினைக்காத பேராண்மையே அறிவுடைய பெரியோர்க்கு அற்றும் சிறந்த ஒழுக்கமும் ஆகும்.

149. பிறன் மனைவியின் தோளைச் சேராதவன் கடல் சூழ்ந்த இவ்வுலகில் எல்லா நன்மைகளையும் அடைவான்.

150 ஒருவன் அறத்தின் எல்லையை அறியாமல் பல தீமைகளைச் செய்தாலும், பிறன் எல்லையில் நிற்கும் பெண்மையை விரும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் புத்தாண்டு!..

வெடிகள் சுட்டு வரவேற்க
வேளை இது நல்லதல்ல
வெள்ளைப்புறா விட்டு நாம்
பச்சைக்கொடி காட்டுவோம்!...

தமிழர் திருநாளினால்
தரணி அமைதி ஆகினால்
தமிழர் எமக்குப் பெருமைதான்
தரமும் அதிலே இருக்குதாம்!..

வாழும் முறைகள் மறந்து நாம்
வன்முறையில் நின்றதால்
நாளும் மரணம் ஆனதே
நல்லதெல்லாம் போனதே!...

பாழும் இந்தப் போரினால்
பாரில் பரவிச் சிதறினோம்
கேளும் புறாக் கூட்டமே
கேட்கின்றோம் நாம் அமைதியே!...

"""சிறுவர் அமுதம்""" ஆசிரியர்
அமரர் சின்ன இராஜேஸ்வரன்
ஜேர்மனி.

# கவிஞன்

நாடு படும் பாடுகளையும்
பாடுபடும் மக்களையும்
ஏடு கொண்டு எழுதுவான்-பின்
வீடு கூட இல்லாமல் வீதியில்
தேடுவாரற்று அலைவான்!...

# குளிர்

தொட்டுத் தொட்டு
தொடர்ந்து கொள்வதும்
பட்டுப்பட்டு மேனியில்
படர்ந்து கொள்வதும்
பிடிக்காதே உன்னை!...

# பெருமாட்டி

விழிகளின் பார்வையால்
ஒளி ஏற்றிய சீமாட்டி
வழிகாட்டியாய் உலகிற்கு
ஒளி கொடுத்த பெருமாட்டி!...

திருமதி.இராஜேஸ்வரி சிவராசா
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலநிலை மாற்றம்!.....

மதிப்பும் மந்தாரமும் கடும் குளிரான காலநிலை
வெப்பமின்றி நடு நடுங்கும் உடல் நிலைத்தாக்கம்
'வைரஸ்' என்ற கொடிய உபாதை இருமல் காய்ச்சல்
உலகளவில் காவுகொண்டு மூழ்கிக் கிடக்கின்றதே...

மரஞ்செடிகள்கூட வாடி வதங்கிச் சோர்ந்து போயின
பனித்துளிகள் படர்ந்து வெள்ளை வெளேரென காட்சிதான்
பறவையினங்களும் உயிரினங்களும் ஒதுங்கி மறைந்து வாடின
மலர்ந்து சிரிக்கின்ற பல வர்ணப் பூக்களெல்லாம்
மடிந்து தலைகவுண்டு மொட்டையாய்போன மர்மமென்ன!...

இக்காட்சிதனைக்கண்டு கவலைதான் வராதே
இசைபாடித் தேன் சேகரிக்கும் தேனீக்கள் கூட
மகரந்தச் சேர்க்கையை மறந்து போயிருப்பதும்தான் ஏனோ!...

குளிரும் பனியும் மழையும் இளவெயிலும் குளிர்காற்றும்
பருவம்மாறிப் பல மாற்றங்களால் தலைவிரித்தாடுகின்றன
வீடுகளிலே முடங்கிக் கிடந்து முணங்கிய நிலையில்
எதிர்கொள்ளாது பலம் இழந்தவர்களாய் பாரும்
காலநிலை மாற்றத்திலே புலம்பெயர் வாழ்வில்!...

திருமதிஜெயா நடேசன்.
ஜேர்மனி.

## பெண்ணே!.

தலை முக்காடிட்டு
இன்னும் மூலைக்குள் இராதே
உன்னை விதவை என்று
மூச்சுவிடாமல் பேசுகின்ற
சமூதாயத்தைத் தீண்டிவிடு!...


## விலைமகன்!.

சிலை ஒத்த பெண்ணோடு
கலைவடிவான அழகோடு
அலை மகளான பெண்ணுக்கு
விலை மகனாய் சந்தையில்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்-169 அட்டைப்படக் கவிதை




வால்வெள்ளிச் சிதறலாய் வாணவெடிகளின் தெளிப்பு
வருடங்களின் வளர்ச்சியை வகுத்துவிட்டதில் களிப்பு
மால்வண்ண அட்டைதனிலே மகிழ்ச்சியின் வடிப்பு
மண் , மகளின் நாணத்திலே மருவிநிற்கும் சிவப்பு...

பால்பொங்கிவழியும் பொங்கற் பானையின் ஜொலிப்பு
பாரினுக்கே வாழ்த்துரைக்கும் பண்பினிலே சிறப்பு
நூல்வடிவம் ஆக்கியதில் நுட்பங்களின் திணிப்பு
நுகர்வதற்குத் தந்துவிடும் நூதனத்தின் விரிப்பு...

கால்நூற்றாண்டைக் கடந்துவந்த கம்பீரத்தில்களிப்பு
கலைகளையும் வளர்த்துவிட்ட கடமையின் தெறிப்பு
நால்திசையும் நடைபயிலும் நாகரீகத்தின் தெளிப்பு
நாட்டுக்கும் புலத்துக்குமான நரம்புகளின் இணைப்பு...

ஆல்போல் விரிந்து வளர்ந்து அரசோச்சும் வனப்பு
ஆண்டு இருபத்தைந்திலும் அமைதியின் இருப்பு
கோல்கொண்டு ஆளுகின்ற கொள்கையிலே பிடிப்பு
குடும்பத்தோடு சிவராஜா குவித்திட்ட அர்ப்பணிப்பு...


அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச்- 8 சர்வதேச பெண்கள் தினம்

International Women's Day



மார்ச் 8ம் தேதியை உலகம் வாழ் பெண்கள் தினமாக ஐக்கியநாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டு உலகம் பூராவும் கொண்டாடப்படுகின்றது. உலகில் பல வகையான ஒடுக்குமுறைகளுக்குப் பெண்கள் முகம்கொடுத்துப் போராடி வருகிறார்கள். நம் சொந்த நாட்டிலும் ஏன் புலம்பெயர் தேசங்களிலும் நமது இனப் பெண்கள் பலவகையான ஒடுக்குமுறைகளைச் சந்தித்து வருகின்றார்கள். இன்னும் மேலாக தாயகத்திலும் போர் நடைபெறும் நாடுகளிலும் ஆயுதப்படையினர் பெண்களை பாலியல் கைதிகளாகவும் பாலியல் வன்முறைகளிலும் ஈடுபடுத்தி பெண்ணினத்தை அழித்துவருவது கண்டிக்கப்பட வேண்டிய விடையமாகும். உலகப் பெண்ணினம் சரிசமமாக வாழ நாம் புரிந்துணர்வுடன் நோக்க வேண்டும். பெண்களின் உரிமைகள் வென்றெடுக்க நாமும் எம்மாலான பங்களிப்புக்களை நல்க வேண்டும்.

மண் சஞ்சிகைக்குக் கடந்த 25 ஆண்டுகளாகவும் பல பெண்கள் பலவகையான ஆக்கங்களைப் படைத்துவருகிறார்கள். இத்தருணத்தில் அவர்களின் இன்னல்கள் மறைந்திட வேண்டுவதுடன் அவர்களுக்கும் இனிதான வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.. இவ்வேளையில் அவர்களை ஊக்குவித்து ஆதரவு நல்கிவரும் கணவன்மார், பெற்றோர்களுக்கும் அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெண் உரிமை காப்போம்!..

பெண்களை மதிப்போம்!..

இத்தினத்தையொட்டிச் சிறப்பான சில ஆக்கங்கள் இச்சஞ்சிகையில் இடம்பிடித்துள்ளன...

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டும்வரை எட்டு...!




தைகடந்து இரண்டு திங்களில் தரணியிலே மகளிருக்கெல்லாம்
தனியான ஒருதினமிதுவென்று தைரியமாய் உரைப்பாய் தோழி.!
மெய்வருந்தி உழைத்ததெல்லாம் மேதினியே அறியும் வண்ணம்
மேன்மையினைப் பறைசாற்றி மிடுக்காய்நீயும் பகர்வாய் தோழி..!
கைவிலங்கு எமக்கில்லை காலத்தினையே மாற்றிடும் திறனோடு
கண்களிலே சுடரேந்தியபடி கலாச்சாரத்தினைக்காப்பாய் தோழி.!

செய்கையிலே எமக்கெல்லாம் சேதாரமெதுவும் இல்லையென்று
செவிகளுக்கெலாம் உறைக்கும்படி செப்பிடுவாய் எந்தன்தோழி..!
பொய்கையிலே பூத்தபுஷ்பமெனப் புகழ்பாடும் புலவர்களுக்கு
பொருதுகின்ற திறன்கொண்ட பூக்களென்று புணர்த்திடுதோழி..!
வைகைபோல நடந்துவந்து வாழ்ந்து முடித்த காலங்கள்மாறி
வைகறையைப் புலரவைக்கும் வலிமையினைக் காட்டுதோழி..!

நெய்விளக்கை ஏற்றிவைத்து நிமிர்ந்திடாமல் நகர்ந்ததெல்லாம்
நேற்றோடு மறைந்ததென்று நெற்றியில் தெறிக்க உரைத்திடு..!
தெய்வங்களுக்கு ஒப்பிட்டுன்னை தேவைகளைப் பூர்த்திசெய்து
தேய்பிறைபோலாக்கிய காலம் திசைமாறியதையும் செப்பிவிடு.!
வையகத்தின் ஆணுக்குநிகராய் வாய்ப்புக்களையும் நீயாய் தேடு
வாய்ச்சொல் வீரர்களின் பொய்வார்த்தைகளுக்கும் பதிலடிகொடு.!

மெய்யான தமிழ்ப்பண்பாட்டினை மிஞ்சிடாது நீயும் காத்துவிடு..!
மிதக்கின்ற கனவுகளைமிதித்துவிட்டுக் மிடுக்காய்க்கோலம்போடு.!
மையெழுதிய கண்களுடன் மனைகளுக்குள் வலம்வந்ததெல்லாம்
மலையேறிப்போனதென்று மாதரின் உயர்வினை நீமகிழ்ந்துபாடு..!
செய்கையிலே நேர்த்தியோடும் சிறந்த நல்லுயர் ஞானத்தோடும்
சீரோடு சிறப்புக்களையும் சேர்த்துச் சிந்தையினால் வாகைசூடு..!

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் வாழ்க்கை

பாண்டவரை மணம் முடித்த பாஞ்சாலி கதை
பாரதப் போரில் முடிந்தது
சிறீராமனை மாலையிட்ட சீதையின் கதை
காடலைந்து அசோக வனம் சென்று
தீக்குளிப்பில் போய் முடிந்தது
கோவலனின் மனைவியான கண்ணகி கதை
சிலம்பொடித்து மதுரையை எரித்து மறைந்தது
துஸ்யந்தனை காதலித்த சகுந்தலை கதை
ஏமாற்றதில் அலைந்து வனத்திலே முடிந்தது
நளமகாரா ஜாவை துணைவனாக்கிய தமயந்தி கதை
தனிமையில் கண்ணீரில் அலைய வைத்தது
அன்று தொட்டு இன்று வரை அனேக
பெண்களின் வாழ்க்கை கண்ணீர் கதையே
ஒரு ஆணின் வெற்றிக்கு பின்னாலே
எப்போதும் ஒரு பெண் நிற்கின்றாள்
ஆனால் பெண்களின் கண்ணீருக்குத்தான்
ஆண் மகன் காரணமாக வாழ்கின்றான்
இதுதான் பெண்ணின் வாழ்க்கை

கவி நீலா
ஜேர்மனி.

## தமிழ்நாட்டில்!...

இந்தியா-தமிழ்நாட்டில் பெண்பிள்ளைகள் கருவில் அழிக்கப்படுவது அதிகரித்து வருகின்றது. இதனால் பெண்களின் பிறப்புவீதம் குறைவடைந்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சீதனம், சாதியம், அறிவீனம், மக்கள்தொகை அதிகரிப்பு, பொருளாதாரம் போன்ற காரணிகளே இந்தச்சிசுக் கொலைக்கு அடிப்படைக்காரணம் என அறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பெண்களுக்கு உற்ற தோழி தாய்!......

நீங்கள் இளம் பெண்ணாம இருந்தால் உங்கள் தாயாரிடம் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால் இளமைப் பருவத்தில் உங்களுக்குப் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படும். அதில் எல்லாம் நீங்கள் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வெண்டுமானால் உங்களுக்கு அம்மாவின் ஆலோசனை மிக அவசியமாகும். கீழ்க்கண்ட நெருக்கடிகள் உங்களுக்கு ஏற்பட்டால் உடனடியாக உங்கள் அம்மாவிடமும் அப்பாவிடமும் சொல்லிவிடவேண்டும்...

-உங்களைக் காதலிப்பதாக யாராவது தொந்தரவு செய்தால், அந்தத் தொந்தரவு தொடர்ந்தால் அதைப்பற்றி உங்கள் அம்மாவின் காதில் போட்டு விடுங்கள்.

-உங்களுக்குப் பணம் தேவைப்பட்டால் அது அத்தியாவசியமானதாக இருந்தால் அம்மா-அப்பாவிடம் காரணத்தை விளக்கிப் பணம் கேளுங்கள். தோழிகள், நண்பர்களிடம் கடன் வேண்டிச் சமாளித்துவிடலாம் என்றோ, பெற்றோருக்குத் தெரியாமல் பணத்தை எடுக்கலாம் என்று நினைக்காதீர்கள். அத்தகைய போக்கு உங்களைத் தவறான வழியில் கொண்டுபோய் விட்டுவிடும்

-உங்கள் வளர்ச்சியிலும் சின்னச்சின்ன முன்னேற்றத்திலும் உங்கள் பெற்றோர்கள் மிகுந்த மகிழ்ச்சி கொள்வார்கள். அதனால் அத்தகைய விடையங்களை முதலில் பெற்றோரிடம் சொல்லுங்கள்.

-உங்களை இத்தனை வயதுவரை நன்றாக வளர்த்திருக்கும் அம்மா, உங்களுக்குத் தவறான வழி எதையும் காட்டமாட்டார். உங்களை மற்றவர்களிடம் காட்டிக் கொடுக்கவும் மாட்டார்.

-அதனால் உங்களுக்கு எத்தகைய நெருக்கடிகள் இருந்தாலும் மிகப்பெரிய மனப்பாரம் இருந்தாலும் அதை அம்மாவிடம் சொல்லி நிம்மதி கொள்ளுங்கள்.

-நீங்கள் தவறான தோழிகளிடம், நண்பர்களிடம் சிக்கிக்கொண்டால் உங்களுக்கு ஏதாவது ஒரு வகையில் மிரட்டல் வந்துகொண்டிருந்தால் தனியாக நின்று அதனைச் சமாளித்துவிடலாம் என்று நினைக்க வேண்டாம். மனந்திறந்து உங்கள் அம்மாவிடம் பேசுங்கள் எப்போதும் நன்மைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை அதிரவைத்த தமிழ்ச்சிறுமிகள் இருவர்...

ஜெர்மனியில் வசிக்கும் ஈழத்து சிறுமி சபேசினி செந்தூர்ச்செல்வன் ஜெர்மனியில் நடைபெற்ற All rights too The voice kids SAT 1 நிகழ்ச்சியில் மிகவும் சிறப்பாக பொப் பாடல் ஒன்றை பாடி அசத்தியுள்ளார்.சபேசினியின் குரல் ஒரு வித்தியாசமான பொப் இசைக்கு ஏற்ற அருமையான குரல் மற்றும் தனது குரலுக்கு ஏற்ற பாடல் தெரிவு என்றும் பாராட்டினார்கள்.

மற்றும் மூன்று நடுவர்களில் சபேசினிக்கான பயிற்சியாளரை தெரிவு செய்யும் போது ஜோகானஸ் என்ற நடுவரை அவர் தெரிவு செய்கிறார். அப்போது ஜொகானஸ் அளவு கடந்த மகிழ்ச்சியை சொல்ல மற்றைய இரு நடுவர்களும் தம்மை பயிற்சியாளராக தெரிவு செய்யவில்லையென தமது கவலையை சொல்கிறார்கள். சபேசினியின் திறமையான வெளிப்பாட்டின் பெறுபேறுகள் நடுவர்கள், அவையோர்கள்,மற்றும் உறவுகளின் குதூ கலிப்பிலும் வெளித்தெரிகிறது ..இவை முன்னர் இடம் பெற்றவை,

பின்னர் ஜெஸ்ஸிகாவின் பாடல் ஈழத் தமிழர் பாடலில் சாதனையாளர்களா இன்று.இதுகடவுள் தந்த பரிசு:உற்சாகத்தில்சூப்பர்சிங்கர்ஜெஸ்ஸிகா நம்முடைய மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று அப்பா, அம்மா, பாட்டி ஆகியோர் அடிக்கடி கூறுவார்கள். இறுதிப்போட்டிக்கு இரண்டு நாட்களுக்கு முன் என் பெற்றோர், போட்டியில் வெற்றி பெற்றால் கிடைக்கும் பரிசை இலங்கைப் போரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வளர்ச்சிக்கு கொடுக்கலாமா? என்று கேட்டார்கள்.

அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற கிடைத்த சந்தர்ப்பமாகத்தான் இதைக் கருதுகிறேன். போரில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மட்டுமின்றி இங்குள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கும் சிறிது நிதியை ஒதுக்கியுள்ளோம் என்று நெகிழ்ச்சியுடன் கூறுகிறார் ஜெஸ்ஸிகா.ஒன்பதாம் வகுப்பு படிக்கும் 14 வயது மாணவியான இவர், விஜய் தொலைக்காட்சியின் சூப்பர் சிங்கர் ஜூனியர்ஸ் 4 போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். இதற்காக தனக்கு பரிசாகக் கிடைத்த 1 கிலோ தங்கத்தின் மூலம் கிடைக்கும் ரூ.30 லட்சத்தை இலங்கையில் வாழும் ஆதரவற்ற தமிழ்க் குழந்தைகளின் வளர்ச்சிக்கு வழங்கியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஜெயிக்காவை நாமும் பாராட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் என்றால்!...

பெண் என்றால்

பெண் என்றால் பூ என்றும் நிலவு என்றும் கண் என்றும் போற்றபட வேணும் என்று சொன்னவர்களும் நற் கவிஞர்களே!

அப்படி பெண்களை வான்மதிக்கும் வண்ணமலருக்கும் ஒப்பாகப் பாடிய கவிஞர்கள் வாழ்ந்தது ஒரு காலம், இன்று பெண்களை பெண்ணாக கூட மதித்து நடப்பது அரிதாக போனது ஒரு காலம், பெண் என்பவள் பொறுமையின் சிகரமாய் புன்னகை முகத்தோடு பூமியிலே பூரண நிலவாக பொட்டோடு பூவோடு பதுமைகளாய் வாழ்ந்து வந்தது அக்காலம்.பெண் என்பவள் கவிஞர்களின் கற்பனையில் கவிதையாக உலாவந்தாள், கலைஞர்களின் கைவண்ணத்தில் கலைசிற்பமாய் உருகொண்டாள், ஆனால் நிஜ வாழ்விலே பெண்கள் ஆண்களுக்கு ஒரு பேதைகளாய் சுகம் தரும் போதையாய், அடங்கி வாழப் பிறந்த அடிமைகளாய் ,சுமக்கப் பிறந்த பாவ பட்ட ஜீவன்களாய், குனிந்து தாலி வாங்கி குனிந்த தலை நிமிராது வாழ வேண்டிய பிறவிகளாய் தான் பல ஆண்களால் கையாளப்பட்டு வந்தாள், இன்றும் சில ஆண்கள் பெண்களை அப்படிதான் கையாளுகின்றார்கள் என்பதில் பொய்மை இல்லை.

பூமாதேவியும் ஒரு பெண் என்று போற்றப்படுகிறாள் பூமியில் நடக்கின்ற அத்தனை கொடுமைகளையும் சகித்துக் கொண்டு இத்தனை உயிர்களையும் தாங்கிக் கொண்டு இருக்கின்ற பூமாதேவி கூட கொடுமைகளை தாங்க முடியாத போது கொந்தளித்துப் புயலாக சுனாமியாக பொங்கி எழுகின்றாள், பெண் என்பவளும் அது போலதான் பெண்ணாகப் பிறந்ததுக்காக வாழும் காலம் வரை கொத்தடிமையாய் கொடும் சொற் கேட்டும் கொடுமைகளைத் தாங்கியும் வாழ முடியாது போகையில் அவளும் பொங்கி எழத்தான் செய்கிறாள்.

அமுது அளித்து
அழகுபார்த்து
அன்பு காட்டி
அறிவை ஊட்டி
முத்தம் தந்து
உச்சி முகர்ந்து
எம்மை வளர்பவளும் தாய் என்னும் பெண்தான்
இரவு பகல் ஏங்கி நின்று
உன்னை ஒரு முறை பார்த்தால் மகிழ்ந்திருந்து
உன் மொழி கேட்டே இன்புற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் ஒரு முத்தத்தில் காதல் உறவு கொண்டு
உனக்காக காத்திருப்புகளும் காதலி என்னும் பெண்தான்
உயிரோடு உயிர் கலந்து
உடலோடு உடலிணைந்து
உனக்கு உச்ச இன்பம் தந்து
உன்னை உயிராக நினைத்து வாழ்பவளும் மனைவி என்னும் பெண்தான்.
மேலும் தோழியாக, தங்கையாக, மகளாக பெண் பல வழியில் ஆணுக்கு உறவாக வந்து உதவியாகத்தான் இருக்கிறாள் அதனால்தானே பெண் இல்லா உலகத்திலே சுகம் இல்லை என்று பாடிவைத்தார்கள் கவிஞர்கள். அப்படிபட்ட பெண்ணை காலடியில் போட்டு மிதிக்காமல் மதித்து சம உரிமை கொடுத்து வாழ்பவன் எத்தனை ஆண்களடா?
இந்த உலகில் எத்தனை ஆண்களடா?
பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள் ஆனால் சில ஆண்கள் பெண்களை பேயாக அல்லவோ பார்க்கிறார்கள் பெண்களைப் பூவாக நிலவாக கண்ணாகப் போற்றாவிழலும் பெண்களை ஒரு உயிர் உள்ள ஜீவனாக பெண்ணாக மதித்து வாழ விடுங்கள் ஆண்களே பெண்களை பெண்ணாக வாழ விடுங்கள்.

கவி மீனா
ஜேர்மனி.

## இலங்கையில்..

- இலங்கையில் வருடாந்தம் சுமார் 25.000 பேருக்கு பாரிசநோய் ஏற்படுவதாகவும் இதற்கு புகைத்தல் மற்றும் குடிப்பழக்கமும் காரணம் என மருத்துவர் சங்கம் அறிவித்துள்ளது.

- சிகரட் பாவனை அதிகரித்துவருவதால் இலங்கையில் வருடாவருடம் சுமார் 30.000 பேர் இறப்பதாக சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்.

- சென்ற வருடம் இலங்கையில் சுமார் 8.000 வாகன விபத்துக்கள் இடம்பெற்றிருப்பதுடன் 1.972 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் அறிக்கை தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் விடுதலை...

பெற்றோரின் மடியில் குழந்தையாய், குடும்பத்தில் பிள்ளையாய் தனையனின் கைகளில் தங்கையாய், கணவனின் மார்பில் மனைவியாய், குழந்தையின் அணைப்பில் அன்னையாய் பரிணமிக்கும் பெண்மை எவ்வளவு உயர்வானது. உயிர்வினூடே உன்னதமாய் உலாவருவதுதானே பெண்மையின் சிறப்பு. அடக்கமாய் , அன்பாய் அரவணைக்கும் பெண்மை அவனிக்கும் என்றும் அவசியம்தானே!.. ஆண்மைக்குத் துணையாய் வாழ்க்கையை அரங்கேற்றுவதுதானே பெண்மையின் இயல்பாகக் கருதப்படுகின்றது.

"கல்வியில் மட்டுமே பெண்களின் வாழ்க்கையை
விடிய வைக்க இயலும்"'

"நீ நிரூபித்த பெண்மையிலிருந்து வாய்த்தது நான் மதிக்கும் ஆண்மை" என்கிறார் கவிஞர் அறிவுமதி. "தோசை...நிலா...புகை....அடுக்களைக்குள் வானம்" என்று அடுப்படி மட்டுமே உலகமாய் எண்ணிப் பெண்கள் வாழ்ந்த காலம் ஒன்று உண்டு. சிந்தனை, கல்விப் புரட்சி இக்காலத்தை மாற்றத் தொடங்கியது. இதனால் பெண்களும் விழிப்படையத் தொடங்கினார்கள். பெண்களும் நாட்டு நடப்புக்களில் ஆர்வம் செலுத்தத் தொடங்கினார்கள். பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்களின் கவிதைகள் பெண் விடுதலையை அதிகம் பாடின. தந்தை பெரியார் போன்றோரின் பார்வையும் செயற்பாடுகளும் பெண் விடுதலையை நோக்கியதாகவே இருந்தன. இதன் விளைவாய் பெண்களின் பார்வை கல்வியின் மீது திரும்பியது.

"கல்வியில்லாத பெண்கள் களர் நிலம் அந்நிலத்தில் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை" என்றார் பாரதிதாசன். கல்வியில் மட்டுமே தங்கள் வாழ்க்கையை விடிய வைக்க இயலும் என்று பெண்கள் உணர்ந்தனர். விளைவு இன்று கல்வி உலகம் பெண்களின் கையில். பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என அனைத்திலுமே பெண்களின் கூட்டம் நிரம்பி வழிகின்றது. நாளுக்கு நாள் பெண்கள் வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், அறிவியலாளர்கள்,, ஆசிரியர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுனர்கள் எனப்பல துறைகளிலும் உருவாகி வருகிறார்கள். ஆண்களுக்கு நிகராக இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் சாதனைப்பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. விண்வெளிப் பயணம் முதல் போர்க்களச் சாதனைகள் எனப் பெண்கள் ஆயிரம் வரலாறு படைக்கின்றனர். தற்காலத்தில் பெண்களின் வளர்ச்சியானது பல நிலைகளைச் சார்ந்தே அமைகின்றது. வாழ்விடம், பொருளாதாரம், தகுதி, கல்வி, சாதி, மதம் ஆகியவற்றைச் சார்ந்தும் பெண்களின் வாழ்க்கை தொடர்கிறது.

நாட்டுப்புறப் பெண்களின் நிலை, நகர்ப்புறப் பெண்களின் நிலையை விடத் தாழ்ந்தே இருக்கின்றது. படித்த பெண்களின் நிலை, பாமரப் பெண்களின் நிலையைவிட உயர்வாய் போற்றப்படுகின்றது. படித்த பெண்கள் தங்கள் வாழ்க்கையின் உண்மை நிலையைத் தீர்மானிக்க இயலாமல் இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கின்றனர். இவை எதிலுமே சம்பந்தப்படாமல் நாட்டு நடப்புக்களும் அறியாமல், உண்மைநிலை என்னவென்று தெரியாமல் இருதலைக்கொள்ளி எறும்பு, அங்கும் இங்கும் இழபடுகிறார்கள் படிக்காத பாமரப்பெண்கள்.

உலகமயமாதல், நவீனமயமாதலின் விளைவாக, உணர்வுப் போராட்டங்களின் பிடியில் சிக்கிச்சீரழிந்து கொண்டிருக்கின்றனர். இக்காலப் பெண்கள் திசைமாறிய கலாச்சாரப் பண்பாடுகளைப் பின்பற்றி பாதிப்புக்குள்ளாகி, நிழலை உண்மை என்று நம்பி மோசம் போகின்றனர் இளைய பெண்கள். விளம்பர யுகத்தின் நுகர்வு பண்டமாகி, கடைச்சரக்கில் கலாச்சாரம் தேடி, போட்டிகளில் அழகைத்தேடி, விளம்பரங்களில் போலிகளைத் தேடிப் பறப்பதை பிடிக்க இருப்பதை இழந்து கொண்டிருக்கிறார்கள் நவீன பெண்கள்.

பெண்கள் வேலைக்குச் செல்வதும், கல்லூரிகளுக்குப் போவதும், வாகனங்கள் , மகிழுர்ந்து போன்றவற்றை இயக்குவதும் விண்வெளிக்குப் போவதும் பெண்களுக்கு ஏற்பட்ட மிகப்பெரும் மாற்றங்களாகக் கருதுகிறார்கள். அதனால் அவர்கள் அடையும் பாதிப்புக்களையும் சிக்கல்களையும் யாரும் எண்ணிப் பார்ப்பது இல்லை. இச்சிக்கல்களைத் தீர்க்க யாரும் முன்வருவதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மட்டுமல்ல இன்று உலகில் பல நாடுகளில் பெண்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவே கருதப்படுகிறார்கள், போர், உள்நாட்டுப்போர், மற்றும் வறுமை, மதம், நிறவெறி, சாதியம் போன்ற பல கொடுமைகளாலும் பெருமளவு பெண்கள் பரிதப்புக்குள்ளாகிவருவது கவலைக்குரிய விடையமாகும். ஆகவே பெண்கள் கல்வியில் முன்னேற வேண்டும். உழைப்பில் முன்னேற வேண்டும். தங்களுக்காய் போராடத் துணியவேண்டும். கல்வி, சிந்தனைத் தெளிவு இதில் அவசியம் வேண்டும். எனவே பெண்கள் தமக்கு ஆக்கம் தரும் செயற்பாடுகளில் அதிகம் நாட்டம் கொண்டு ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு வித்திட வேண்டும்.

சேயாகப் பெற்றோரை
தங்கையாக தனயனை
தோழியாக நண்பனை
மனைவியாக கணவனை
தாயாகக் குழந்தையை
விளக்காக சமுதாயத்தை
மகிழ்விக்கும் பெண்ணே!..
உன்னை மகிழ்விக்க
உனக்குள் ஊன்றிடு
ஒரு புதிய விதையை!...

"உண்மை நிலையறிந்து செயலாற்றுவோம்!..
"பெண்ணின் பெருமையைப் பறைசாற்றுவோம்!...

திருமதி பூங்குழலி வீரன்,
மலேசியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றங்களில் பெண்கள்...

இன்று பல நாடுகளின் பாராளுமன்றங்களில் பெண்கள் அங்கம் வகிப்பது கூடிவருகின்றது. அந்த அளவுக்குக் கல்வி, பொருளாதாரம், அரசியல் வளர்ச்சி கண்டிருப்பது சிறப்பான விடையமாகும். உலகில் பெண்களின் பாராளுமன்றப் பிரசன்னம் கூடிய நாடாக ஆபிரிக்க நாடுகளின் ஒன்றான றுவண்டா நாடு முன்னணி வகிக்கின்றது. இந்தநாட்டின் பாராளுமன்றத்தில் மொத்தம் 80 பேர் பதவி வகிக்கையில் இதில் 51 பேர் பெண்கள் அங்கம் வகிக்கிறார்கள். பொதுவாக ஐரோப்பாவில்தான் பெண்கள் உரிமைகள் பதவிகள் மேலோங்கிக் காணப்பட்டாலும் அரபு, மற்றும் இஸ்லாம் நாடுகளில் பெண்களின் அங்கத்துவம் மிக..மிக..அடியோடு இல்லை என்றே கூறவேண்டும். அதாவது மத்தியகிழக்கு நாடான கட்டார் நாட்டின் பாராளுமன்றில் 35 பிரதிநிதிகள் காணப்படினும் ஒருவர்கூட பெண் உறுப்பினர் இல்லை என்பது இங்கே கவனிக்கத்தக்க விடையமாகும்.

தற்போது பாராளுமன்றங்களில் பெண்களின் அங்கத்துவம் கூடிய நாடுகளின் வரிசையை இங்கே காணலாம்....

| நாடு | பெண்கள் | ஆண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1வது - றுவண்டா | 51 | 29 | 80 |
| 2வது- சுவீடன் | 157 | 192 | 349 |
| 3வது- ஜேர்மனி | 230 | 401 | 631 |
| 4வது- சீனா | 699 | 2288 | 2987 |
| 5வது- அமெரிக்கா | 79 | 352 | 431 |
| 6வது- ர்ஷ்ஷியா | 61 | 389 | 450 |
| 7வது- இந்தியா | 62 | 481 | 543 |
| 8வது- கட்டார் | 00 | 35 | 35 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாரன்ஸ் நைட்டிங்கேள்....

பிளாரன்ஸ் நைட்டிங்கேலைப்பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்தத் துணிச்சல் மிக்க வைத்திய உதவியாளர் (நர்ஜ்) 1820ம் ஆண்டு இத்தாலியில் ஆங்கிலேயப் பெற்றோரின் மகளாகப் பிறந்தார். இளமை வயதில் தன்னைத் திருமணம் செய்துகொள்ளப் பலர் முன்வந்தபோதிலும் பிளாரன்ஸ் அதில் துளிகூட நாட்டமில்லாமல் இருந்தார்.

அவர் மனம் தன்னலம் அற்ற சேவையையே ஆக்கிரமித்திருந்தது. ஏழைகளுக்குச் சேவை செய்ய விரும்பி ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட கல்வியில் கவனம் செலுத்தி வந்தார். பெற்றோருக்குத் தங்கள் மகள் தேர்ந்தெடுத்த பணி கசந்தது. இருந்தும் பெற்றோரை எதிர்கொண்டு ஜேர்மனியில் கைஸ ர்வேர்த் என்ற இடத்தில் நர்ஸிங் பயிற்சி மையத்தில் சேர்ந்தார்.

இந்தத் துறையில் பயின்று மேற்படிப்பை பிரான்ஸ் நாட்டில் தொடர்ந்தார். தனது 33வது வயதில் பிளாரன்ஸ் இங்கிலாந்திலுள்ள மருத்துவமனை ஒன்றின் மேற்பார்வை அதிகாரியாகப் (சுப்பிரின்டன்ற்) பொறுப்பேற்றார். ஆனால் அப்போது இடம்பெற்ற கிரிமியாப் போரில் காயப்பட்ட வீரர்களுக்கு தொண்டு செய்ய விரைந்தபோதுதான் நர்ஸ் பணியின் சவால்களைச் சந்தித்தார். எலிகள் நிறைந்த அந்த மருத்துவ மனையை தன்னோடு வந்த 38 நர்ஸ்களின் உதவிகளோடு சுத்தம் செய்ய முனைந்தார்..

அங்கே சவர்க்காரம் கிடையாது, சலவை இயந்திரம் ( வாஷிங் மெசின்) கிடையாது, உடைகள் கழுவுவதற்கு ஏற்ற இடமோ, துடைத்துக்கொள்ளத் துண்டு, துணிகளோ கிடையாது. காயப்பட்டவர்களைப் பராமரிக்கக் கட்டில்களே, மெத்தைகளோ படுக்கை விரிப்புக்களோ ஏன் பண்டேஜ் போன்றவைகளும் கிடையாது. இருந்தும் பிளாரன்சும் அவரது சகாக்களும் சோர்ந்துவிடவில்லை. சவாலைச் சந்திக்கத் துணிந்து களத்தில் இறங்கினார்கள்.

யுத்தம் முடிந்தபோது நர்ஸ் பணியிலும் மருத்துவமனை நிர்வாகத்திலும் நிகழ்த்திய புரட்சி உலகெங்கும் எட்டுத்திக்கும் பரவிவிட்டது. 1860ம் ஆண்டு லண்டனிலுள்ள செயின்ட் தோமஸ் மருத்துவமனையில் நைட்டிங்கேள் தாதியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை முதன் முதலில் ஆரம்பித்தார். இதுதான் மதத்தொடர்பில்லாத உலகின் முதலாவது தாதிகள் பயிற்சிக் கல்லூரியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உருவெடுத்தது. இறுதியில் தன்னுடைய வயதான காலத்தில் மற்றவர்களின் தயவை எதிர்பார்க்கும் நிலையில் பல ஆண்டுகள் கிடந்தார். அந்த நிலையிலும் ஆரோக்கியத்தின் தராதரத்தை முன்னேற்றுவது சம்பந்தப்பட்ட பல புத்தகங்களையும் துண்டுப்பிரசுரங்களையும் எழுதினார். மருத்துவ தாதியர் பணிகளிலும் மருத்துவ நிர்வாகத்திலும் அவர் ஆரம்பித்து வைத்தவைகளே பிரபலமாகின. இவை பல உலகநாடுகளுக்குப் பரவின. உலக தாதியர் பணிக்கு இவர்தான் முன்னோடியாகத் திகழ்கின்றார். 1910ம் ஆண்டு பிளாரன்ஸ் காலமானார். பிளாரன்ஸ் தனக்கென வாழாமல் பிறருக்காக வாழ்ந்துகாட்டிய உத்தமியாக இன்றும் உலகம் போற்றுகின்றது. பெருமைக்குரிய இப்பெண்மணியை என்றும் நாம் மறக்கமுடியாதல்லவா!..

------------------

## பிளாஸ்ரிக்...

உலகில் தற்போது சமார் 15 – 20 வகையான கொள்வனவு பிளாஸ்ரிக் பைகள் பாவனையில் உள்ளன. வருடாவருடம் சுமார் 9 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் வகைகள் கடல், ஆறு, வாவி, குளம் போன்ற நீர் நிலைகளில் வீசப்படுவதாகவும் இதனால் சுற்றுச்சூழலுக்கு பெரும் மாசு விளைவிக்கப்படுவதாகவும் உலக சுற்றாடல் பாதுகாப்பு ஆய்வின் தகவல் குறிப்பிட்டுள்ளது. எனவே பிளாஸ்ரிப் பொருட்களை, பைகளை கணஇடபடி வீசி எறிந்திடாமல் அதற்கென உரிய இடங்களில் வீசினால் எல்லோருக்கும் நல்லதே!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மைக்கும் இணையுண்டோ!...

ஏனைய உயிரினங்களிலும் மனிதன் மேலானாவன் பகுத்தறிவு, சரி பிழை, தர்மம் அதர்மம், நீதி, நல்லவை என்வற்றை அறிந்து கொள்ளக் கூடியவள். இத்தகைய உயரிய மனித குலத்தை தோற்றுவிக்கும் பொறுப்பு மனிதர்களுள் பெண்ணுக்கே உள்ளது. இயல்பாக எதையும் தாங்கும் சக்தி, விட்டுக் கொடுக்கும் மனம், மென்மை, கருணை, பொறுமை போன்ற மனித விழுமியங்கள் கொண்டவாளாக பெண் இருக்கின்றாள். இத்தகைய பெண் தன் வாழ்வில் தாயாக, மனைவியாக, சகோதரியாக, மகளாக விளங்குகின்றாள். இந்த ஒவ்வொரு நிலையிலும் மனித விழுமியங்களை கடைப்பிடிப்பவள் பெண் ஆவாள்.

பெண்ணின் பல்வேறு நிலைகளில் பெண் என்ற நிலையினை நோக்கும் போது "பெண்" என்ற பதத்திற்கு பொய்யாமொழி புலவர் பல்வேறு விழுமிய ஏற்றங்களை உணர்த்தியுள்ளார்.

"தற்காத்துத் தற் கொண்டாற் பேணி தகை
சான்ற சொற்காத்துச் சோர்விலாப் பெண்" என்ற குறள் மூலம் அரிய பொக்கிசத்தையும் தன் கணவனையும் காத்து பிற கடமைகளிலும் தவறாதவள் பெண் எனக் கூறினார். இதை அடுத்து பெண்ணின் சிறப்பை கூறியுள்ளார்.

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண்டாகப் பெறின்" பெண்ணானவள் கற்பில் உயர்ந்தவளாக இருப்பின் அவளே இவ் உலகில் சிறந்தவள் எனக் கூறினார். இதை தொடர்ந்து பெண்ணின் அடுத்த நிலையை நோக்கின் மனைவி ஆகும். ஒரு பெண் திருமணமாகி தன் கணவனுடன் வாழ ஆரம்பிக்கின்றாள். பெண் தன்னையிழந்தாள் தன் நாமம் கெட்டாள். அவளது தன்மையும் இழந்து மனைவி என்ற பெயரை தாங்கி கொள்கின்றாள். பெண் பதிவிரதை என அழைக்கப்படுகின்றாள்.

"தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை." எனும் குறள் மூலம் தெய்வத்தை தொழுவதை விட தன் கணவனையே தெய்வமாக தொழுது எழுபவள் என்ற வகையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

"மனைத்தக்க மாண்புடையவளாகித் தற் கொண்டாள்
வளர்த்தக்காள் வாழ்க்கைத் துணை." என்ற குறள் மூலம் தான் வாழச் சென்ற மனைக்கும் கணவருக்கும் ஏற்ப வாழும் பண்பு கொண்டவள், அதுவே மனைவியின் இலட்சணம் என்கிறார். இவை மட்டும் அல்லாது பலரும் பெண்களை பற்றி கூறியுள்ளனர். இளங்கோ சிலப்பதிகாரம் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டுகிறார். "போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்னும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்

மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்

காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ'. இத்தகைய அழகும் நலமும் வாய்ந்த கண்ணகிக்கு தந்தையாக அமைந்தவன் மாநாயகன் என்ற வணிக பெருமகன். கண்ணகி உண்மை தன்மை கொண்டவள், காதல் மனம் கொண்டவள் எனவும் எடுத்துக்காட்டியுள்ளார்.

இதை தொடர்ந்து சேக்கிழாரும் பெண்மை பற்றி எடுத்துக் காட்டியுள்ளார். "தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழுவது என்னை.. ஆண்டருளும் நீராகில் அடியேன் பின் வந்தனை

ஈண்டுவினைப் பரசமயக் குழி நின்றும் எடுத்தாள்

வேண்டும் எனப் பல முறையும் விண்ணப்பந் செய்தனரால். என்ற பாடல் மூலம் திலகவதியாரின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார். இவர்களைப் போல கச்சியப்பர் பெண்மையின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார்.

"பொன் செய்தார் முடிமகணேன் அமுகொமுகுத் திருமுகத்துப் பொலிவு காணேன்" என்ற அடி மூலம் கணவனை இழந்து தவிக்கும் ஒரு பெண்ணின் இயல்பு, மென்மை, உண்மை தன்மை போன்றவற்றை காட்டியுள்ளார். கம்பரும் பெண்கள் பற்றி கருத்து கூறியுள்ளார்.

"வெள் எருக்கஞ் சடை முடியான் வெற்பு எடுத்த திருமேனி மேலும் கீழும் எள் இருக்கும் இடம் இன்றி உயிர் இருக்கும்.' இவ்வாறு அழுது புலம்பும் மண்டோதரி தனது கையால் இராவணனைக் கட்டித் தழுவியபடி தன் உயிரையும் நீத்தாள். இதனூடு மண்டோதரியின் கற்பின் சிறப்பை காட்டி உள்ளார். மேலும் கம்பர் கோசலை, திரிசடை, மண்டோதரி, சீதை ஆகியோரையும் காட்டியுள்ளார்.

எனது சிந்தனையிற் பிற்கால பெண்மை பற்றி நோக்கும் போது காந்தியடிகள் வாக்கிலே "ஆசைக்கு இணையான அறிவாற்றலுடைய துணையாக விளங்குபவள் பெண். இதை தொடர்ந்து அன்னை திரேசா அம்மையாரைப் பற்றி நோக்கும் போது நோபல் பரிசு பெற்றவர். இவர் துறவியாக மாறி தன் வாழ்வை கடவுளுக்கு அர்ப்பணித்தார். இதை தொடர்ந்து யாழ் மாவட்டத்திலும் சிறந்த பெண்களை நாம் காண முடியும். இவ் வகையில் மங்களம்மாள் பிரபல வழக்கறிஞராக விளங்கியர். இவர் பெண்களின் நவீன முன்னேற்றத்திற்காக குரல் கொடுத்தார்.

மேலும் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நான்கு தசாப்தங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாக சொற்பொழிவு பணி எழுத்துப் பணி,குழந்தைகளிற்கும் முதியோருக்கும் வாழ்வளிக்கும் பணி என்பவற்றை சிறப்பாக செய்து வந்தார். இவர் பல பட்டங்களை பெற்றவராகவும், இவர் சிறந்த பெண் என்ற பெயரையும் பெற்றுக் கொண்டார்.

இதை தொடர்ந்து வசந்தா வைத்தியநாதன் இவர் பிற நாட்டில் பிறந்து வளர்ந்து கல்வி பெற்று நம் நாட்டுக்கு வந்து புகழ் தேடித் தந்தவர். இவர் சிறந்த வித்துவான் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இவர் பல சமயச் சொற் பொழிவு ஆற்றினார். இவர் இளம் பிள்ளைகளிற்கு ஒரு கருத்தை கூறியுள்ளார். பழமைகளை புறக்கணிக்காதீர்கள் நம் முன்னோர்கள் எடுத்து வைத்த ஒவ்வோரு அடியும் அர்த்தமுள்ளது என்பதாகும். இவ்வாறு பெண்களைப் பற்றியும் அவர்களது திறனையும் காண முடியும்.

மேலும் ஆன்மீகத்தில் பெண்களின் பங்கை நோக்கும் போது செல்லாச்சி அம்மையார் ஆச்சிரமம் அமைத்து ஆன்மீக வாழ்வை வாழ்ந்தார். இதை தொடர்ந்து மாதாஜி என்று எல்லோராலும் அழைக்கப்படும் விசாலாட்சி அம்மையார் ஆன்மீக துறையில் மிகவும் சிறப்பு பெற்று விளங்கினார். இவர்களைத் தவிர இன்னும் பல பெண்மணிகளின் ஆன்மீக வாழ்வை நோக்கமுடியும். வவுனியா நகரில் ஜெயராணி அம்மா என்று அழைக்கப்படும் இளம் பெண் ஒருவர் அநாதை இல்லத்தை நிறுவி அதிகமான பிள்ளைகளை பராமரித்து வருகிறார். இவ்வாறு நமக்கு தெரிந்த பலரை இனங்காட்டி உள்ளோம். ஆனால் இன்னும் சிலர் நமக்கு தெரியாமல் பங்களிப்பு செய்து வருகின்றனர்.

மனிதன் பூரணத்துவமாகவும் சமாதானமாகவும் வாழ வேண்டுமானால் அவனது உள்ளத்தில் உடலில் ஆன்மீகம் கலந்தனவாக இருக்க வேண்டும். இதன் மூலம் ஆனந்தமான, அமைதியான சமூகத்தை, சூழலை அமைக்க முடியும். இதில் பெண்கள் முக்கியம் பெறுவர். இவ்வாறு காணப்படும் பெண்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். அவை சமூக ரீதியான பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை என்பனவாகும். சமூக ரீதியான பிரச்சனை எனும் போது திருமணம், சீதனம், கல்வி, சுகாதாரம், மருத்துவ வசதி என்பவற்றைக் கூறலாம். அண்மைக் காலங்களில் சில பெண்கள் இள வயதிலேயே விதவையாகியுள்ளார்கள். இதற்கு காரணம் யுத்தம். மேலும் பாலூட்டும் தாய்மார்களிற்கு போசாக்கான உணவின்மை. இதன் மூலம் குழந்தைகள் இறப்பும் அதிகமாகி விடுகிறது.

அடுத்து பொருளாதாரப் பிரச்சனையை நோக்கும் போது நிரந்தர வேலையின்மை, கல்விதரத்திற்கு ஏற்ப வேலையின்மை, கைத்தொழில், சேவைத் தொழில் போன்ற பிரச்சனைகள் ஆகும். இதை விட பெண்கள் பல வன்முறைகளுக்கு உள்ளாகின்றனர். துஸ்பிரயோகம், விமர்சனங்கள் என்பவற்றுக்கும் பெண்கள் உள்ளாகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு காணப்படும் பெண்கள் பல துறைகளில் வளர்ச்சி பெற்றும் வருகின்றனர். பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, பேட்டிக்காண்பவராக, தயாரிப்பாளராக வெற்றி நடை போடுகின்றனர். மற்றும் நாடகம், கூத்து, மேடைபேச்சுக்கள் பட்டிமன்றம் என பல துறைகளில் விஸ்வரூப மெடுத்துத் துள்ளனர். ஆகவே பெண்களின் சமுதாயமானது சிறந்த ஜனநாயகத்தன்மையும், சோசலிசத்தையும் உருவாக்க முடியும்.

வரலாறு பற்றி பேசப்படுகின்ற போது பெண்களின் படைப்புத்திறன் ஆக்கத்திறன் வெளிக்காட்டப்படல் வேண்டும். பெண் படைப்பாளிகளை வளர விட வேண்டும். இவர்களிடம் இருந்து எப்பொழுதும் சிறந்த நுணுக்கமான நேர்த்தியான வினைத்திறன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே இக் கட்டுரையில் பெண்மையின் ஆற்றல், திறமை எடுத்துக் காட்டப்படுவதுடன் பெண்மைக்கு இணையானது ஒன்றும் இல்லை. பெண் மிகவும் சக்தி வாய்ந்தவள் என்பதை இக் கட்டுரை மூலம் அறியலாம். அதி சிறந்த பெண் முன்னேற்றத்தினூடாக ஜனநாயகத்தையும், சமவுடமையையும் வெற்றி கொள்வோம்.'

## மிகநீளமான ஆங்கிலச் சொல்

வெப்ஸ்டர் (Webster) வெளியிட்டுள்ள அகில உலக ஆங்கில அகராதியில் காணப்படும் ஒரு சொல்லைப் பாருங்கள்..

Pneumonoultramicroscopicsilicovolcanoconiosis

47 எழுத்துக்களைக்கொண்ட இச்சொல் சுரங்கங்களில் வேலை செய்வோருக்கு வரும் நுரையீரல் சம்பந்தப்பட்ட ஒரு நோயின் பெயராகும்.

இச்சொல்லை அமெரிக்க நாட்டவர்கள் தமது ஆங்கில மொழியில் பாவிக்கிறார்கள் என்ற தகவலையும் அச்சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

எப்படி இருக்கிறது இச்சொல்லின் நீளம். இதைப் போல் நம் தமிழ்மொழியிலும் பல நீண்ட சொற்கள் காணப்படுகின்றன.

தகவல்-திருமதி இராஜேஸ்வரி.சிவராசா
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு-142

## (தை - மாசி- 2015)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தை | ப் | பொ | ங் | க | ல் | ள் |
| க | ட் | டி | ட | ம் | ர | க |
| ழு | ளா | ர | வ | ப | உ | ங் |
| சி | த் | தி | ள | ர | ட | தி |
| கா | த | ல | ர | தி | ன | ம் |
| ம் | ரு | ட் | பி | க | ம் | ள |
| ச | ல் | ல | ஞு | அ | வ | கா |

போட்டியில் கலந்துகொண்டவர்களும். பரிசு பெறுபவரும்.

திருமதி.ஜெயா.நடேசன் - Havixbeck

திருமதி.கலைவாணி.ஏகானந்தராசா - Weeze

திருமதி.சுலோசனா.புவனேந்திரன் - Duisburg

திருமதி.கலைமகள்.பதஞ்சலி - Weeze

திரு.தி.தேவானந்தராசா - Mochengladbach

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளும்வாழ்த்துக்களும்... குறுக்கெழத்துப் போட்டியில் இடம்பெற்ற தவறுகளைச் சுட்டிக்காட்டிய வாசகர்களுக்கு நன்றிகள். அதலால் பரிசு வழங்கப்படவில்லை. வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

## கண்!.

கண்ணால் தெரியாத கடவுளுக்கு உதவுவதைவிட கண்ணால் தெரியும் ஏழைகளுக்கும், இலயாதவர்க்கும் உதவுவதே மனிதனின் முதல்கடமையாகும்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி -145
# (பங்குனி-சித்திரை- 2015)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ:-

01-07 உலகப் பெண்களுக்கான தினம்

11-13 இதைத்தீட்டாமல் உன் புத்தியைத் தீட்டு என்பார்கள்

19-20 மக்கள் பணிசெய்வோருக்கு அவர்கள் இறந்தபின் இதுவும் வைப்பார்கள்

29-32 வீட்டுப் பாவனைப் பொருள்

வ-இ:-

11-08 கொடைக்குப் பெயர் போனவன்

19-16 மாதம் ஒன்று.

28-22 பொய்யாமொழிப் புலவர்.

41-38 கட்டிடங்கள், சனத்தொகை கூடய இடத்தை இப்படியும் அழைப்பார்கள்.

45-43 படையையும் நடுங்க வைக்கும் உயிரினம்

கீ-மே:-

19-05 வீட்டில் குடும்ப உறவு ஒன்று.

28-07 நாம் இப்படிச் செயற்பட்டால் அதிக பலன் உண்டு

41-34 சிலரை இந்த மிருகத்தின் குணத்திற்கு ஒப்பிடுவர்

43-22 நற் போதனைகள் தந்த பகவான்.

46-32 நம்மவர்களுக்கு இந்த ருசியான உணவே அதிக விருப்பம்

மே-கீ:-

01-22 இலங்கையில் வறண்ட மாவட்டம் ஒன்று.

23-44 ஒரு உருவம்

26-47 நம்மவர்களின் பொரியல் உணவு

28-49 கொள்ளை, களவு என்று பொருள்படும்

41-48 நீர் நிலைகளில் ஒன்று

முடிவுதிகதி: 30-04-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் வெள்ளிவிழா!......

1990 ம்ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 2015 தை மாதம் 25வது ஆண்டை நிறைவுசெய்துள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். இந்த நாட்டின் காலநிலையைக் கருத்திற்கொண்டு வெள்ளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 02-05-2015 சனிக்கிழமை டியூஸ்பேர்க் நகரில் சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

சிறுவர்களே!. இளையோர்களே!.

- வெள்ளிவிழாப் போட்டிகள் ஏற்கனவே மண் மலரில் வெளிவந்தன.

-நடைபெறவிருக்கும் கலைவிழாவில் உங்கள் திறமைகளையும் வெளிக்கொண்டுவரலாம். ஏதாவது கலைநிகழ்வுகளை மேடையேற்ற வரும்பும் சிறுவர், இளையோர். நீங்கள் தரவிரும்பும் நிகழ்ச்சியானது 5 - 7 நிமிடங்களுக்குட்பட்டிருத்தல் வேண்டும் (நடனம், பரதம், பாட்டு, ஆடல், பேச்சு, கவி என வேறு ஏதாவது.) 20-04-2015ம் தேதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும்.

பெரியோர்கள்!.

-கலை நிகழ்ச்சிகளை மேடையேற்ற விரும்பும் மண்ணின் எழுத்தாளர்கள், ஆக்கதாரர்கள், நலன்விரும்பிகள் தரவிரும்பும் கலை நிகழ்ச்சிகள் பற்றி 5-7நிமிடங்களுக்குட்பட்டு அமைதல் வேண்டும். நாடகம், கவியரங்கு, கருத்தாடுகளம், பேச்சு போன்றவற்றில் பங்குகொள்ள விரும்புபவர்கள் 20-04-2015ம் தேதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆகவே அனைத்து வாசகர்கள், நலன்விரும்பிகள் யாவரும் இவ்விடையங்களைக் கருத்திற்கொண்டு, ஆக்கமும் ஊக்கமும் தந்து பயனடையும் வண்ணம் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்!..


-ஆசிரியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலச் சிந்தனை....

## திருநீற்றுப் புதன் (விபூதித்திருநாள்)



ஒவ்வொரு வருடமும் தவக்காலம் நாற்பது நாட்கள் வருவதுண்டு. திருநீற்றுப் புதனுடன் தவக்காலம் தொடர்கின்றது. சாம்பல் திலகமிட்டு மனம் திருந்தி நற்செய்தியை நம்புங்கள் என்று கூறப்படுகின்றது. சிலுவைப்பாதை தியானம், கல்லறை செபம், வெள்ளிக்கிழமை விரதம், நாற்பது நாளும் மச்சம் மாமிசம் தவிர்ப்பு போன்ற செப, தப ஒறுத்தல் முயற்சிகளையும் கடைப்பிடித்து வருகின்றனர்.

விபூதிப்புதன் தொடங்கியவுடன் குருத்தோலை ஞாயிறு அன்று ஓசன்னா சொல்லி யேசுவைக் கழுதையின்மேல் இருத்தி ஊர்வலமாகக் கொண்டு சென்று குருத்தோலைகளில் செய்த சிலுவையை வீட்டிலே வைப்பர். அதன்பின் காய்ந்த குருத்தோலையை கோயிலின் பீட அருகில் வைத்து எரித்து சாம்பலை ஆசிநீர் கொண்டு ஆசீர்வதித்து சிலுவை அடையாளம் குருவானவர் இடுவார். தவக்காலத்தில் உட்பொருள், விசுவாசிகள் மனத்தூய்மை பெற்று பாஸ்கா விழாவில் மறைபொருள் மகிழ்ச்சியை எதிர்கொள்வதுதான்.

பக்தி முயற்சிகளிலும் அன்புச் செயல்களிலும் ஈடுபட்டுப் புத்துயிர் அளிக்கும் திருவருட் சாதனம் உண்மையாகவே புதுப்பிக்கப்பட்டு இறை மக்களுக்கான அருளைப் பெறும் நிலை அடையச் செய்வதே தவக்காலம் நமது ஏறுதல் முயற்சிகள் தூர்க்குணங்களை அடக்கவும் மனத்தை ஆண்டவரிடம் எழுப்பவும் நல்வாழ்வின் பண்புகளை பெற்றுக்கொள்ளவும் பயன்பட வேண்டும் ஏழைகளுக்கு உணவளித்து உதவி செய்தல் நோயாளரைப் பார்வையிட்டு ஆறுதல் கூறுதல். இதன் மூலம் இறைவனின் அருளைப்பெற வாய்ப்புண்டு. எனவே இத்தவக்காலத்தில் செப, தப, தான, தருமப்பணிகளில் ஈடுபட்டு இறையன்பைப் பெறுவோமாக!...

திருமதி ஜெயா நடேசன்
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மண்" சஞ்சிகை — டியுஸ்பேர்க், ஜேர்மனி.

கண்டுபிடியுங்கள் - சிறுவர்பகுதி

( பங்குனி – சித்திரை - 2015)



இலக்கங்களைத் தொடர்புபடுத்துங்கள் உருவாகும் படத்திற்கு அழகாக வர்ணம் தீட்டுங்கள்வர்ணம் தீட்டிய படத்தை மண் சஞ்சிகையின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அதிஷ்டசாலி ஒருவருக்குப் பரிசு வழங்கப்படும்.

பெயர் ------------------------------------------------

பிறந்த திகதி ------------------------------------------------

முகவரி ------------------------------------------------

------------------------------------------------

முடிவு திகதி 20.04.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்குட்டிகள்.....

(குட்டிக்கதை)

ஆசைக்கு ஒன்று, ஆஸ்த்திக்கு ஒன்று. புலம்பெயர் நாட்டில் பெற்று வளர்த்தவர்களில் ஒருத்திதான் மேனகா. இங்கு பிறந்து, கல்விகற்று, பல்கலைக்கழகம்வரை படித்த மேனகாவின் தாய் தந்தையர் தேடிய சொத்துக்களை குடும்ப இரத்த பாசங்களுக்குப் போய்ச்சேர வேண்டும் என்ற ஆசை ஒருபுறம், மகள் சாதி, சமயம் மாறிக் கலியாணம் செய்திடுவாள் என்ற பயம் அல்லது வேற்று நாட்டவரை காதலித்துவிட்டால் என்ற ஏக்கம், போலிக் கௌரவத்தால் ஊரில் O/L படித்த தனது தங்கையின் மகனுக்கு மேனகாவிடம் பூரண விருப்பம் கேளாமலே கட்டாயக் கலியாணம் போல் கட்டிவைத்து வெளிநாட்டுக்குக் கூப்பிடப்பட்டது. பெற்றோருக்கும் தமது கௌரவப் பிரச்சனை தீர்ந்துவிட்டது என்ற நிம்மதி.

பெற்றோரின் விருப்பத்திற்காக கட்டிவைத்த கலியாணத்தால் ஒரு பிள்ளைக்கும் தாயானாள் மேனகா. தாயாகியது பெற்றோருக்கு சந்தோஷ மானாலும் மேனகாவின் குடும்ப வாழ்வில் கணவனின் சந்தேகப்புத்தி தொற்றிக் கொள்ளவே திருமண முறிவு வந்து பிரிவினை ஏற்பட்டு சொற்ப காலத்திலேயே விவாகரத்திலும் முடிவடைந்தது. மேனகாவில் வாழ்வில் புயல் வீச ஆரம்பித்தது.

மேனகா படித்தவள் அல்லவா..தன் படிப்பிற்கு ஏற்ற வேலை தேடிச் செய்து தானும் தனது பிள்ளையும் சந்தோஷமாக வாழ்கையில் பெற்றோர் பல இடங்களில் மறுமணம் பேசவே...நம் இனத்தவர்கள் யாருமே முன்வரவில்லை. ஒரு தமிழ்ப்பெண் இரண்டாவது கலியாணம் செய்வதென்றால் நம் சமூகத்தில் எத்தனை வசைபாடுகள். எத்தனை இடர்பாடுகள். ஆனால் ஆண் ஒருவர் இரண்டாம், மூன்றாம் கலியாணம் செய்தாலும் நம் சமூகம் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வது ஏன் என்றும் தெரியவில்லை.

இரண்டு ஆண்டுகளாக கம்பனி ஒன்றில் மேனகா வேலை செய்துகொண்டிருந்தபோது மிசேல் என்ற டொச்சுக்கார இளைஞன் இவளின் கதையை அறிந்து வேதனைப்பட்டதுடன் அவள்மீது இரக்கங்கொண்டான். பின்பு காதலாக மாறியதால் பின் இருவரும் சேர்ந்து வாழ்ந்ததால் அவனின் அன்புப் பரிசாக மீண்டும் ஒரு குழந்தை பிறந்தது. சந்தோஷமாக வாழ்வு ஓடியபோது வாகன விபத்தொன்றில் மிசேல் உயிர் பறிபோகவே அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் சூறாவளி அடித்து ஓய்ந்தது.. இரண்டு பிள்ளைகளோடும் நிம்மதியிழந்து கண்ணீரும் கம்பலையுமாக அவள் வாழ்கையில் நம்மவர்களின் வசைபாடுகளோ சொல்லமுடியாது. அவள் வாழ்ந்த பகுதியில் கூடுதலான தமிழர்கள் வாழ்ந்தபடியால்.. அவள் கடைதெருவுக்குப் போய் வரும் போதெல்லாம் நம்மவர்களின் கேவலமான பார்வைகளும் அவர்களின் அவப்பேச்சுக்களும் நிறையவே அவள் நெஞ்சைக்குற்றிக் கிழித்தனவே. "அடங்காதவள்" "திமிர்பிடித்தவள்" புருசனைக்கொன்றவள் என்றெல்லாம் நம்மவர்களின் பட்டங்கள் கிடைத்தன. வேண்டாத பிரசைபோல் அவளை ஒதுக்கினார்கள். இதனால் அவளின் தாய் தந்தையரும் மனமுடைந்தனர்.

மேலும் ஒருவருடம் ஓடியது இந்த ஊரில் இரண்டு பிள்ளைகளோடும் கஸ்டப்பட்டது மட்டுமல்ல நம்மவர்களின் வசைபாடல்களால் மனமுடைந்தாள். பின்பு விழிப்படைந்தாள் தூரத்திலுள்ள சிறு ஊர் ஒன்றுக்கு வேலை மாற்றலாகிக் குடியேறினாள். புதிய இடம், தனிமை வாழ்வு, ஒருவருடைய சோலியும் இல்லாமல் இரு பிள்ளைகளோடும் அவள் வாழ்வு பிரகாசித்தது. சிறிது காலம் உருண்டோடியது. மன நிம்மதி வேண்டி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அக்கிராமத்திலுள்ள தேவாலயம் ஒன்றிற்குப் பிள்ளைகளுடன் சென்றுவருவது வழக்கமாகியது.

அங்குதான் ஆபிரிக்க நாட்டு அகதி இளைஞன் படித்துப் பட்டம் பெற்றவன் சந்திக்கிறான். பல நாட்களாகச் சந்தித்த இளைஞன். இருவரும் மனம்விட்டுப் பேசினர். மேனுகா இளம் பெண்தானே. அவளுக்கும் அன்பு, பாசம், பரிதாபம், காதல் , உணர்வு உண்டுதானே. நாளடைவில் இருவரும் காதல் வசப்பட்டு கணவன்-மனைவியாகியதால் மீண்டும் ஒரு அன்புப்பரிசாகக் குழந்தை ஒன்றைப் பெற்றெடுக்கிறாள்..இருவரும் படித்தவர்கள் புரிந்துணர்வு உள்ளவர்கள் நேயம் மிக்கவர்கள் என்றபடியால் எதுவித பிரச்சனைகளும் இல்லாமல் வாழ்வு நகர்கின்றது. இப்போ...பழுப்பு நிறத்தில் ஒரு பையன்... வெள்ளை-பழுப்பு கலந்த நிறத்தில் ஒரு பெண்குட்டி,...பழுப்பு-கறுப்புக் கலந்த நிறத்தில் ஒரு குட்டிப் பையன்.. ஆகா இப்போ பாரதியாரின் பாடல் வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றதே!.........வெள்ளை நிறத்தில் ஒரு குட்டி...சாம்பல் நிறத்தில் ஒரு குட்டி...கருஞ்சாந்து நிறத்தில் ஒரு குட்டி!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்..

ப.பசுபதிராசா
ஜேர்மனி

அழகிய ரோசாமலர் ஆயினும் அது தன் பாதுகாப்பிற்காகத் தன்னுடன் முள் சுமந்து நிற்கின்றது. தன் உழைப்பை உறிஞ்சவரும் மனிதனைத் தன் கொடுக்கால் கொத்திக் கலைக்கின்றது தேனீ. தன் கூட்டை உடைத்து விளையாடும் எதிரிகளைப் பந்தாடுகின்றன குளவிகள். தன் எதிரி தனக்கு எதிராகச் செயற்படுமுன்னரே எழுந்து தாக்கிவிட்டு மறைந்துவிடுகின்றது பாம்பு. இவைகளின் எதிர்ப்புணர்வுகளை யாரும் தவறு என்று எடுத்துக்கொண்டு நீதி மன்றம் போவதில்லை. பிறப்பால் ஐந்து அறிவு படைத்தவை, இவைகள் எனப்பார்க்கப்பட்டாலும் தாங்கள் வாழத்துடிக்கும் ஆசைக்குத் தடைபோடும் தமது பிரகிருதிகளை எதிர்க்கும் இயல்பை சுதந்திரப் பிறப்பு உரிமையாகக்கொண்டு பிறந்தவைகள் இவைகள்.

ஆனால் பிறப்பால் மகத்துவம் படைத்தவன் என்று வரம் வாங்கி மனிதன்தான் தனது இனத்தைத் தானே எதிர்த்து அழிக்கும் ஈனச் செயலுக்கு உரியவன். ஆனாலும் பெண் என்ற அற்புதமான மனித மேன்மையை, மென்மையை ஆண் என்ற மனிதன் வன்மைப்படுத்திப் பெண்ணின் மேல் கட்டவிழ்துவிவிடும் அஜாரகமே, மகளீர் தினமாக இன்றும் நினைவு கூரப்படுவது அவமானமே. மானிடனுக்கு மானிடன் அடிமைப்பட்டுக் கிடக்கின்ற வடிவங்கள் அநேகம். ஆயினும் இந்தப் பிரபஞ்சத்தில் இணையற்ற படைப்பு பெண் என்பவள்தான் என்பதை ஒப்புக்கொண்டது மாதிரிக் காட்டிக்கொண்டு ஆண் ஆடும் கபடநாடகம் ஆயிரம். அதிலும் தமிழர்கள் பெண்ணுக்குக் கடவுளர்களின் பெயர்களை, நதிகளின் பெயர்களை, ஏன் நீதியின் இருப்பிடமாகக்கூட இருப்பவள்கூடப் பெண் என்று மாய்மாலம் காட்டியபடி, அவளோடு வாழ்வைப் பகிர்ந்து கொள்ளச் சீதனம், படிப்பு, உழைப்பு, அடக்கம், பொறுமை, இசை என எல்லாவற்றையும் பட்டியல் போட்டுப் பெண்ணின் ஜனனத்திற்கே சாவுமணி அடிக்கிறான் ஆண் தமிழன்.

பகுத்தறிவும் நாகரீகமும் உச்சத்தில் நிற்கும் இந்த வேளையிலும் பெண் இப்படித்தான் இருக்க வேண்டும், அப்படித்தான் நடக்க வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புறுத்தவும் வலியுறுத்தவும் சட்டத்தை ஆண்களுக்கு யார்தான் கொடுத்தது?.. வாழ்வைப் பகிர்ந்துகொள்ள அன்பு, அறிவு, பண்பு என்பன இருபாலருக்கும் பொதுவான பார்வையாகப் பார்ப்பதை விடுத்து பெண்தான் நன்னெறிகள் அனைத்தையும் கொண்டாடி மகிழவேண்டும். ஆண் சேறு கண்ட இடத்தில் மிதித்துத் தண்ணி கண்ட இடத்தில் கழுவலாம் என்று ஏனைய உயிரினத்திற்கு இல்லா இழிநிலை.

இவைபோன்ற எண்ணங்களை எல்லோரும் அறிவர்- அந்த அநியாயத்தை அழிக்கப் பாடுபடவேண்டிய கடமைப்பாடே அனைவருக்கும் முன்னால் உள்ள பணி. ஆயினும் இந்தக் கட்டுரை வித்தியாசமாக மலர வேண்டும் என்பது என் ஆசை. இந்த ஆண்டு எனது எழுத்துலக வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்த பயணம். இந்த வேளையில் பெண் என்ற பெருமை மிக்க மெல்லினம் அள்ளித் தந்த அன்பும், மரியாதையும், ஆதரவும் பாராட்டும் இந்த ஜென்மத்தில் போதும்..போதும் என்ற பொன் செய்யும் மந்திரம்.

அந்தப் பெண் பாராட்டியதா?..இந்தப் பெண் பாராட்டியதா?.. சிறப்பு என என் நெஞ்சம் மகிழ்ச்சியில் போராடி, மத்தாப்புச் சிதறல்களாய் வானத்திற்கும் மண்ணுக்கும் இடையில் கண் சிமிட்டுகிறது. என் படைப்புகள் என்னவோ பெரிதென என்னால் கணிப்பிடாவிட்டாலும் குதித்துக் குதித்து எழுத வைத்த தைரியத்திற்கு விட்டமின் தந்தவர்கள் ஆண்களைவிடப் பெண்கள்தான். ஒரு வீட்டு முற்றத்தில் பந்தல்கால்கள் போல் நான்கு திசைகளிலும் இருந்து பாராட்டியவர்கள் ஆண்கள்தான். ஆனால் அப் பந்தலில் பற்றிப்படர்ந்து மணம் வீசும் மல்லிகை போன்றது பெண் பெருந்தகைகளின் தட்டிக்கொடுப்பு.

படிப்பைக், கல்வியை எனது சமூகத்தாருக்குத் தடைபோட்ட உடையார்கள் படையாகச் சூழ்ந்துகிடக்கின்ற எனது ஊரில் ஒரு எழைக்குக் கல்வி தருவதற்காய் பாரிய எதிர்ப்புக்களைத்தாண்டி முதல் கரம் நீட்டியவர் ஒரு பெண் அவர் பெயர் திருமதி ஞானம்மா சுவாமிநாதன். சின்னச் சின்னப் பாடல்கள் மூலம் என்றும் என்நினைவில் நின்றதும் எனது கல்வித் தெய்வமாகும். ஆரம்ப பாடசாலை தாண்டி இடைநிலைக்கு விடை வந்தபோது இழிவான பார்வையுடன் இவனையுமா?..பள்ளி ஏற்றுக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியாயின் எங்கள் பிள்ளைகளை எங்கே அனுப்புவது?.. என்ற எரிச்சல் எச்சரிப்புக்களைத் தாண்டி எனக்குப் படிப்புச் சொல்லித்தந்து என் அவமானம் போக்கிய வகுப்பாசிரியை செல்வி கிளி நாகேந்திரம் அடிக்கடி எனக்குள் இருக்கும் சின்னச் சின்னத் திறன்களைப் பாராட்டிப் பற்றுறச் செய்தார். இவரின் தந்தைதான் என் ஊருக்கே ஒளிவிளக்காய் திகழும் பிரமாண்டமான மத்திய மகாவித்தியாலயத்தைக் கட்டியவர். இவரின் பெயர் கொடி வேலி நாகேந்திரம்.. ஊரை ஆண்ட குடும்பம். போராளி இசைப்பிரியா இவர்களின் உறவு.

மெல்ல மெல்ல விழும் மழை பாதை சமைக்க, பின்னேவரும் நதி அதைக் கடலுக்கு அழைத்துச் செல்வது போல் என்னை வழிப்படுத்தவந்த இன்னோர் வகுப்பாசிரியை செல்வி தேவி கணபதிப்பிள்ளை. எனக்குத் திறமைகள் இருப்பதாகப் பலரிடம் சொல்லும் பெருமையின் இலக்கணம். அழகில் அந்தக் கால ஜெயலலிதா. கல்விக்கு அந்தச் சரஸ்வதியேதான். படிப்பை இனங்காட்டி உயர்ந்துவிட்டால் அது எந்தப் பேதமைகளையும் சுட்டு எரித்துவிடும்.. அந்த அற்புத உண்மைக்கு என்னைவிட உலகில் அடையாளம் காண முடியாது. இது என் பெருமை இல்லை. உண்மையின் பெருமையே..

இன்னும் சைவப் பெருமை படைத்த குலத்தோற்றம் திருமதி கனகம்மா காந்தி. பள்ளிப்பாடம் போக, விசேடமாக வீட்டுக்குக்கூப்பிட்டு சைவமும் தமிழும் புகட்டிவைத்த கெட்டிக்காரப் பெண்மணி.. அவரில் காணப்படும் சைவத் தோற்றம் என்னிலும் ஆட்கொண்டது உண்மை. சைவ சமயப் போட்டிகளில் ஈடுபட வைத்தது. பரிசுகள் பல பெற வைத்த பாரிஜாதம். பல சமூகச் சிக்கல்களைத் தாண்டி வகுப்பில் பரீட்சைகளில் முதல் நிலை மாணவனாக என்னை நான் உருவாக்கப் பக்கபலமாக நின்ற இந்த அம்மையாரை நோய் காவு கொண்டபோது என்னை அறியாமலே என் கண்களில் கங்கை.

ஆண் ஆசிரிர்கள்தான் என்மீது கரிசனையும் கண்டிப்பும் உள்ளவர்கள். கல்வி கற்பிக்கும் ஆசான்களாக அதிகம்பேர் பள்ளியில் இருந்தாலும் பெண்கள் மிகச்சிலரே. ஆசிரியர்களைப் பற்றி எழுதவேண்டுமானால் கட்டாயம் ஒரு புத்தகம் எழுதலாம். இந்த நன்றியை நான் ஒருபோதும் மறவேன். கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பது எல்லோருக்கும் சாதாரணம். ஏதோ ஒரு குறிப்பிட்ட வயதை கடத்திவிடும் பொழுதுபோக்கு அம்சமாகத்தான் பலருக்குக் கல்வி என்பது. ஆனால் எனக்கு ஒரு சாதனைக் களம். நான் பள்ளிக்குப் போனதே ஒரு சாதனை. கல்வி உரிமை கட்டாயமாக மாறுபட்ட ஒரு சமுதாயத்தின் பள்ளிக்குச் சென்ற முதல் மகன். அப்படிப் பள்ளிக்குப் போன நான் பத்தோடு ஒன்றாகப் போகவில்லை. பத்துக்குள் ஒருவனாகப் போனவன்.

நூற்றாண்டை நெருங்கும் அந்தக் கல்விக்கூடத்தில் நூற்றாண்டு கண்ட சிறந்த மாணவனாக நான் இருப்பேன். அதற்குத் துணையாக இருந்த மற்றும் ஒரு வகுப்பாசிரியை செல்வி சரோ மனுவேற்பிள்ளையாவர். அன்பொழுகும் பேச்சும் புன்னகை சிந்தும் முகமும், சொல்லித்தருவதில் சொக்க வைக்கும் திறமையும் படைத்தவர். எல்லோரும் ஆசிரியர்களாக வர முடிந்தாலும் படிப்பிப்பதில் ஒரு சில ஆசிரியர்களேமனதைக் கொள்ளை கொண்டுவிடுவார்கள். என்னைத் தட்டித் தருவதில் இவருக்கு நிகர் இவரே. தந்தையின் வழியில் ஆசிரியத் தொழில் புரிந்து பல நல்ல மாணவர்களை உருவாக்கியவர். என் வீட்டுக்கு அதிகதூரமில்லை என்பதால் எனக்குப் பயமும் அதிகமே..

மற்றும் ஒருவர் திருமதி புஸ்பம் அன்ரனி. அக் கல்விக்கூடத்தில் இவர் பெயரைக் கேட்டால் பெண்களைவிட ஆண்களுக்கே கலக்கம் அதிகம். மிகவும் நீண்டகால ஊரகக் கல்வி வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் கல்வித் தோட்டம்.. இவர்களின் பரம்பரை ஆரம்பக்கல்வியை இவரின் தாயாரா ஞானம்மா அம்மையாரிடம் கற்ற நான் உயர் கல்வியின் இறுதிப் பகுதியை மகளான திருமதி புஸ்பம் அன்ரனியிடம் கற்றேன். இவரிடம் பாராட்டுப் பெறுவது இலகுவில் முடியாத காரணம். எனினும் சில சமயம் எனக்கு இலக்காக அமைந்துவிடும். சேலை கட்டுதலும், தந்தையின் நடையும், கண்டிப்பான போக்கும் வித்தியாசப்படும் வித்தியாசங்கள். விஞ்ஞானமாணியான இவர் படிப்பிப்பதைவிட பண்பை வலியுறுத்துவதிலேயே கண்ணாய் இருப்பார். உதவி அதிபரும் இவரே. இவரது கணவனார் அமரர்.பி.எம்.ஜே அன்ரனி. என் விஞ்ஞான ஆசிரியர். சுவைபட நகைச்சுவை சிதறச் சொல்லித்தரும் விஞ்ஞான அறிவாளி யாராலும் மறக்கமுடியாத எளிமையானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவர் இவர் யாழ்ப்பாண ஆசிரியை. ஊரவர்களே படிப்பிக்கத் தயங்கும் வரண்ட என் பூமிக்கு (நெடுந்தீவு) வந்து படிப்பித்த என் புவியியல் ஆசிரியை திருமதி சோமசுந்தரம்.. இவரிடம் நான் பாராட்டுப் பெறாத நாட்கள் குறைவென்றே சொல்லலாம்.. அன்பானவர். யாழ்ப்பாணம் புங்கன்குளத்தைச் சேர்ந்தவர். மிகவும் இலகுவாகப் படிப்பிப்பதில் வல்லவர். இவரது பிள்ளைகள்கூடப் பெரும் படிப்பாளிகள். என்றும் மறக்கமுடியாதவர். பண்புக்குச் சொந்தக்காரர். இவரிடம் கல்வி கற்றது என் பெரும் பாக்கியமே.

இன்னொருவர் செல்வி பரமேஸ்வரி வேலுப்பிள்ளை. எனது உயர் கல்வியின் பொருளாதாரபாட ஆசிரியை. என் ஊர் கண்ட பொருளாதாரச் சிறப்புக் கலைமாணி. அப்போது கல்வியில் பின்தங்கியிருந்த என் பாடசாலையை உயரவைத்த இவர் அப்போது நமக்குக் கிடைத்த நல்ல அறிவாளி. மிகவும் சிறிய தோற்றமுடையவர். கல்வியில் அணுக்குண்டு ஒரு விசேடம். இந்த எல்லா ஆசிரியைகளுக்கும் நான் மாணவன் மாத்திரமல்ல வகுப்புத் தலைவன். இந்த அரிய மறக்கமுடியாத மகளீரிடம் கல்வி கற்க இயற்கை எனக்கு அள்ளித்தந்த பெரும் வரத்தை நெஞ்சில் ஏந்தி, இன்னும் என் நினைவுகளோடு இருக்கும் ஆசிரியைப் பெருந்தகைகளுக்கு கை கூப்பி வணங்கி பெண்மையைப் போற்ற வேண்டிய உண்மையை உணர்த்தி மகளீர் தின வாழ்த்துக்கயையும் பகிர்ந்துகொள்கிறேன்...

## இலங்கை அகதிகள்...

இந்தியாவிலுள்ள 111 அகதிமுகாம்களில் சுமார் 67.000 பேரும் ஏனைய தனியார் வீடுகளிலுமாக மொத்தம் 1லட்சம் இலங்கை அகதிகள் வாழ்கிறார்கள் எனவும் இவர்களில் 67 வீதமானோர் நாடு திரும்ப விரும்பவில்லை எனவும் ஒரு ஆய்வு குறிப்பிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைக்கு மட்டும் வாழுங்கள்...

இன்றைய தினம் வாழ்வதுதான் முக்கியம். நாளை என்றால் காலதாமதம் ஆகிவிடும். வாழ்க்கை பூராகவும் உள்ள பிரச்சனைகள் குறித்து இன்றைக்கே கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். இன்றைக்கு மட்டும் வாழுங்கள். நன்றாய் இருப்பதற்கு உங்களைச் சரிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி எல்லாவற்றையும் சரியாக்க முயற்சிக்காதீர்கள். நீங்கள் யாருடன் பழகினாலும் அவர்களுடன் இணக்கமாகப் பழக முயற்சி செய்யுங்கள். குடும்ப வாழ்க்கையின் இனிமையினை அனுபவியுங்கள்.

குடும்பம்தான் வாழ்க்கையின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்கின்ற இடமாகும். அந்தரங்கமான விஷயங்களை விவாதிக்கின்ற இடமாகும். கருத்துக்களையும் எதிர்காலத்திட்டங்களையும் பரஸ்பர நம்பிக்கையுடன் பரிமாறிக்கொள்கின்ற இடமாகும். எப்போதும் உற்சாகமான தோற்றத்துடன் இருங்கள். யாவருடனும் பண்புடன் பழகுங்கள். மற்றவர்களைப் புகழ்வதில் தாராளம் காட்டிவிட்டால் உங்கள் செயற்பாடுகளையும் மற்றவர்கள் பாராட்டுவார்கள். ஒவ்வொரு சின்னஞ்சிறு விடையத்திலும் பிழை கண்டு பிடித்துக்கொண்டிராமல் ஓர் எடுத்துக்காட்டளாராக விளங்கி மற்றவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

எப்போதும் மற்றவர்களுக்கு நல்லது செய்யவே முயற்சியுங்கள். மற்றவர்களின் சொந்தங்கள் உங்களைப் புண்படுத்தினால் பொறுமை இழந்தவராக உங்களைக் காட்டிக்கொள்ளாதீர்கள். எப்போதும் பொறுமையாக இருங்கள் அதிக பலன் கிடைக்கும். "பொறுமை எப்போதும் பெருமையைத் தரும்" நேற்றைய கவலைகளின் மிச்சங்களை இன்றைக்கு உங்களிடம் வைத்துக் கொள்ளாதீர்கள். நாளைய கவலைகளை முன்கூட்டியே வருவித்துக் கொள்வது உங்களுக்குத்தான் கெடுதல் வரும். எதிர்கால கற்பனைக் கெடுதல்களை நினைவில் இருந்து அகற்றிவிடுங்கள். ஒவ்வொரு மணி நேரத்திலும் சிறப்பாக வாழக் கற்றுக்கொள்வது உங்கள் கையில்தான் உள்ளது. வேலையில் முழுமையாகக் கவனம் செலுத்துவதைப்போல் ஒவ்வொரு பொழுதையும் அன்போடு நேசித்தீர்களானால் உங்கள் வாழ்வும் வளம்பெறும்!...

படித்துச்சுவைத்தவர். திருமதி. பராசக்தி பரமசாமி – லண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதமும் பரமனும்....

திருமதி.சாந்தினி துரையரங்கன்
ஜேர்மனி

பரதம் என்பது ஒரு ஆத்மாத்தமான கலைவடிவமாகும். இதனை கற்கும் மாணவர்கள் மன விருப்புடன் அதன் அழகுணர்சியை உணர்ந்து கற்க வேண்டும். இறைவனை அடைய பல மார்க்கங்கள் உள்ளன. பாமாலைகள் பாடி இறைவனை வழிபடுதல் போல் பரத்தின் மூலமும் நாம் இறைவனை வழிபடலாம். கண்களை மூடி தியானிக்கின்றோம். அவ்வாறே கண்களை மூடிய வண்ணம் மனதினால் எம் ஆடலை இறைவனுக்கு சமர்ப்பிக்க முடியும். ஆடல் பாடல்களால் இறைபதம் அடைந்தோர் வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர். அம்பலத்திலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் முதல்வன் கலைவடிவாகி திகழ்கின்றார். நடராஜ உருவத் திருமேனியைப் பற்றி தற்போது கூட பல மேலைத்தேச ஆய்வாளர்கள் ஆய்வு செய்கின்றார்கள். உலக அசைவின் மூலமே இவரின் வடிவம் தான் என்பது பல அறிஞர்களின் சிந்தனையாகும்.

பரதத்தில் முறையாக அடவுப் பயிற்சிகள் முடிந்த பின்பு பயிலப்படுவது உருப்படிகளாகும். இவ் உருப்படியின் ஒழுங்கு முறையை நாட்டிய மார்க்கம் எனக் கூறுவர்.

## நாட்டிய மார்க்கம் (நாட்டிய உருப்படிகள்)

நாட்டிய மார்க்கம் என்பது சம்பிரதாய பரத நாட்டிய கச்சேரி அமைப்பு முறையில் இடம் பெறும் உருப்படிகளின் வரிசையைக் குறிப்பதாகும். இவ் அமைப்பு முறையினை உருவாக்கியவர் தஞ்சாவூர் பொன்னையாப்பிள்ளை ஆவார்.

பரத நாட்டியத்தின் முழுமையான கச்சேரி அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், பதம், வர்ணம், தில்லானா, சுலோகம் ஆகிய ஏழ பகுதிகளைக் கொண்டது. இவ் ஒழுங்கு முறை சுமார் இரு நூற்றாண்டுகளுக்கு முன் தஞ்சாவூரில் உருவாக்கப்பட்டதாகும். மேலும் கௌத்துவம், ஜாவளி, கீர்த்தனை, விருத்தம், அஷ்டபதி முதலியன சமகால நடனக் கச்சேரிகளிடம் பெறுகின்றன. என தனது பரதக்கலையில் பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.)

1. அலாரிப்பு
2. ஜதீஸ்வரம்
3. சப்தம் அல்லது கௌத்துவம்
4. வர்ணம்
5. பதம்
6. கீர்த்தனம்
7. அஷ்டபதி அல்லது ஜாவளி
8. தில்லானா
9. சுலோகம் அல்லது மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலாரிப்பு

நடன பயிற்சியை(அடவுகள்) முறையாக பயின்ற பின் கற்கின்ற முதல் உருப்படி அலாரிப்பு ஆகும். இது பரத நாட்டிய கச்சேரி அமைப்பு முறையில் முதலாவதாக அமைந்த உருப்படியாகும்.

அலகு என்ற சொல்லில் இருந்து வந்த சொல் அலாரிப்பு ஆகும். அலாரிப்பு என்பது அலர்தல் அல்லது மலர்தல் எனப் பொருள்படும் என்றும் கூறுவர். அலாரிப்பு ஜதி சொற்கட்டுகளால் அமைந்த ஒரு சுத்த நிருத்த உருப்படி ஆகும்.

இது வணக்க முறையைக் கொண்டமைந்த உருப்படியாகும். தலைக்கு மேல் கை கூப்பி வணங்குதல் கடவுள் வணக்கத்தையும், முகத்தின் முன் கை கூப்பி வணங்குதல் குரு வணக்கத்தையும், நெஞ்சுக்கு முன் கை கூப்பி வணங்குதல் சபை வணக்கத்தையும் குறிப்பதாகும்.

அலாரிப்புகள் தாம் தித்தா தெய் தத் தெய் என்ற சொற்கட்டுக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். இச் சொற்கட்டுக்கள் மூன்று காலமும் பயன்படுத்தப்பட்டிருக்கும். நடுவில் தீர்மானத்தைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும்.

உடலின் அங்க(தலை), பிரத்தியாங்க(கண்), உபாங்க(கழுத்து) அசைவுகளைக் உள்ளடக்கியிருக்கும். இது பஞ்ச நடைகளில் ஆடப்படும்.

(அடுத்த இதழில் பரதம் தொடரும்)

## பொன் மொழிகள்.

- நாளைப் பார்க்கலாம், செய்யலாம் என்று உங்கள் பணிகளை தள்ளிப் போட்டால் உங்களைத் தோல்விகள்தான் வரவேற்கும். எனவே இன்றே செய்யுங்கள்..அதை நன்றே செய்யுங்கள்..

-எப்படி இருளை ஒளியால் மட்டுமே வெல்ல முடியுமோ அதே போல் அன்பைத் தவிர வேறு எதனாலும் வெறுப்பை வெல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கவாதத்தை ஏற்படுத்தும் குறட்டை! அலட்சியம் வேண்டாம்....

நாம் சுவாசிக்கும் காற்றானது, நுரையீரலுக்கு செல்ல தடைபடும் போது குறட்டை ஏற்படுகிறது.

ஆனால் அந்த குறட்டை தூங்கும் போது ஏன் வருகிறது என்று தெரியுமா, தூங்கும்போது தொண்டை தசைகள் தளர்வடைந்து ஓய்வெடுக்கின்றன.

அப்போது மூச்சுப் பாதையின் அளவு குறுகிவிடுகிறது. இப்படிக் குறுகிய பாதையில் சுவாசக் காற்று செல்ல முற்படும்போது சத்தம் எழுகிறது, அதற்கு பெயர் தான் குறட்டை.

குறட்டை வருவதற்கான காரணம் சளியுடன் கூடிய மூக்கடைப்பு, ஒவ்வாமை, சைனஸ் தொல்லை, மூக்கு இடைச்சுவர் வளைவு, தைராய்டு பிரச்சனை, உடல் பருமன், கழுத்தைச் சுற்றிக் கொழுப்பு அதிகமாக இருப்பது போன்ற காரணங்கள் குறட்டை ஏற்பட வழிவகுப்பது உண்டு.

புகை பிடிப்பது, மது குடிப்பது, அளவுக்கு அதிகமாகத் தூக்க மாத்திரை சாப்பிடுவது போன்றவற்றாலும் குறட்டை ஏற்படுவதுண்டு.

## ஆபத்துக்கள்

தூங்கிக் கொண்டிருக்கும் போது இதய பாதிப்பு, ரத்த அழுத்தம், பக்கவாதம் போன்றவை ஏற்பட பெரும்பாலும் இதுவே காரணமாக அமைகிறது.

அதிக உடல் எடை காரணமாக, வயிறு, கழுத்து அல்லது தொண்டைப் பகுதியில் அதிக கொழுப்பு சேர்ந்து விடும்.

இதனால் நுரையீரலால் நாம் ஆக்ஸிஜனை உள்ளிருக்கும் போது தேவையான அளவுக்கு விரிவடைய இயலாமல் போகும். இது மூச்சை உள்ளிழுப்பதிலும், வெளியேற்றுவதிலும் சிக்கலை ஏற்படுத்துகிறது.

இந்த சமயங்களில் ஒருவரது ரத்தத்தில் ஆக்ஸிஜன் குறைந்து, கார்பன் டை ஆக்ஸைட் அதிகரித்து உடல்நிலை பாதிப்பு ஏற்படுகிறது.

மேலும் இரவில் தூக்கம் கெட்டுவிடும். காலையில் எழுந்ததும் கடுமையாகத் தலைவலிக்கும்.


பகலில் புத்துணர்வே இல்லாமல் தூங்கி வழிவார்கள், வேலையில் கவனக்குறைவு ஏற்படும், ஞாபக மறதி உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலைமை நீடிக்கும்போது, இதயத் துடிப்பில் பிரச்சனை ஏற்படும். ரத்த அழுத்தம் அதிகரிக்கும், நுரையீரல் பாதிப்பு, மூளை பாதிப்பு என்று பல நோய்களும் கைகோர்த்துக் கொள்ளும்.தடுப்பதற்கு என்ன செய்யலாம்?

1. மல்லாக்க படுக்க வேண்டாம்.
2. உடல் எடையை சீராக வைத்துக் கொள்ள வேண்டும்.
3. தேவையில்லாமல் தூக்க மாத்திரைகள் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது.
4. தூங்கும் போது தலைப்பகுதியை ஓரளவு உயர்த்திக் கொள்ள வேண்டும்.
5. மது, புகைப்பழக்கத்தை கைவிட வேண்டும்.




ஜேர்மனியில்...

-ஜெர்மனியில் மார்பகப் புற்றுநொய் அதிகரித்துக் காணப்படுகின்றதாகவும் வருடாவருடம் இந்த நோயால் சுமார் 72.000 பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும் சென்றவருடத்தில் மட்டும் 17.000 பேர் இறந்திருப்பதாகவும் சுகாதாரப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

-ஜேர்மனியில் வருடாவருடம் 7 வீதமான மக்கள் நுரையீரல் புற்றுநோயால் இறக்கிறார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமாய்வாழ!.. நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்!....

(மேஜிக்குமரன் - வவுனியா

# எள் (எள்ளு)

"இளைத்தவனுக்கு எள்ளைக்கொடு கொளுத்தவனுக்கு கொள்ளைக்கொடு" என்று ஒரு பழமொழி உண்டு. எள்ளில் உள்ள எண்ணெய் சத்துக்கள் உடல் மெலிவாக இருப்பவர்களை குண்டாக்கும் தன்மையுடையது என்பதற்காகவே இந்த பழமொழி கூறப்படுகிறது.

பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட எள்ளின் மருத்துவ குணங்களை தெரிந்து கொள்வோம்.

## பெண்களுக்கு பயன்தரும்

எள் பொடியை உணவில் சேர்த்து உண்டால் மாதவிடாய் இன்மையையும், மாதவிடாய் வலியையும் போக்கும். குழந்தை பெற்ற பெண்கள் உணவுப்பொருட்களில் அதிக அளவில் எள் எண்ணெய் சேர்த்துக்கொண்டால் தளர்ந்த தசைகள் இறுகும். கருப்பைப் புண் குணமடையும்.

விதைகள் நோய் தீர்க்கும். சிறுநீர் கழிவை கூட்டும். கட்டி வீக்கம் ஆகியவற்றை இளக்கும். பேதி மருந்தாக பயன்படும். மலச்சிக்கல் மற்றும் சீதபேதிக்கு பயன்தரும். வெந்தபுண், ஆவிக்கொப்புளம், சீழ்ப்புண்ணை ஆற்றும். தலைமுடிக்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகளில் அடிப்படைப் பொருளாக விதை எண்ணெய் பயன்படுகிறது.

## எள்ளின் நன்மைகள்

100 கிராம் எள்ளில் 1450 மில்லிகிராம் சுண்ணாம்பு உள்ளது. உடலுக்குத் தேவையான சுண்ணாம்பு அளிப்பதோடு மட்டுமல்லாமல் எள்ளில் , தாமிரம், மெக்னீசியம், இரும்புச்சத்து, பாஸ்பரஸ் , துத்தநாகம், வைட்டமின் பி1 , வைட்டமின் இ, ஆரோக்கியமான புரதம் மற்றும் நார்ப்பொருளும் அதிகமாக காணப்படுகின்றன.

## மூல நோயின் தாக்கம் குறைய

மூல நோய் அஜீரணக் கோளாறால் வாயுக்கள் சீற்றமாகி மலச்சிக்கல் உண்டாகி மூலநோய் ஏற்படுகிறது. இந்த மூல நோயின் தாக்கம் உள்ளவர்கள் ஒரு இடத்தில் அமர்ந்திருக்க முடியாமல் தவிப்பார்கள். இவர்கள் எள்ளின் விதையை வெல்லப் பாகுவில் கலந்து தேங்காய் சேர்த்து சாப்பிடலாம். அல்லது எள்ளு விதையை லேசாக வறுத்து பொடி செய்து நெய்யுடன் சேர்த்து சாப்பிட்டால் மூல நோய் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரும நோய்கள் அகல

சருமத்தில் சொறி, சிரங்கு புண்கள் உள்ளவர்கள் எள்ளு விதையை அரைத்து மேல் பூச்சாக பூசினால் சரும நோய்கள் அகலும். அல்லது நல்லெண்ணெயுடன் சம அளவு எலுமிச்சை சாறு கலந்து உடலில் பூசி குளித்து வந்தால் சரும நோய்கள் ஏதும் அணுகாது.

## இரத்த சோகை நீங்க

கருப்பு எள்ளில் அதிகளவு இரும்புச்சத்து நிறைந்துள்ளதால் இரத்தச் சோகையை குணப் படுத்தும். எள்ளுவை நன்கு காயவைத்து லேசாக வறுத்து பொடி செய்து அதனை நல்ல சூடான நீரில் போட்டு 2 மணி நேரம் ஊறவைத்து அதனுடன் தேவையான அளவு பால் மற்றும் பனைவெல்லம் சேர்த்து காலையும் மாலையும் அருந்தி வந்தால் இரத்தச் சோகை விரைவில் மாறி உடல் வலுப்பெறும்.

## வயிற்றுப் போக்கு மாற

வயிற்றுப் போக்கு உள்ளவர்கள் எள்ளை வறுத்து பொடியாக்கி ஒரு ஸ்பூன் அளவு எடுத்து நெய் கலந்து தினமும் மூன்று வேளை என ஆறு நாட்கள் சாப்பிட்டு வந்தால் காலரா மற்றும் தொற்றுநோயால் உண்டாகும் வயிற்றுப்போக்கு நீங்கும்.

## பெண்களுக்கு

பூப்பெய்திய சில பெண்களுக்கு முறையாக உதிரப்போக்கு இருக்காது. மேலும் அடிவயிற்றுவலி போன்ற உபாதைகள் இருக்கும். இவர்கள் எள்ளை பொடி செய்து அதனை நன்கு நீரில் கொதிக்க வைத்து அருந்தினால் மாத விலக்கு சீராகும். மேலும் பெண்களுக்கு உண்டாகும் இரத்தச்சோகை மாறும். இதை மாதவிலக்குக் காலங்களில் அருந்தக் கூடாது.

எள்ளிலிருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெய் உணவுப் பொருளாக பயன்படுகிறது. இதன் பயன்கள் அளப்பரியது. அது பற்றி ஒரு புத்தகமே எழுதலாம்.

கருவுற்ற பெண்கள் எள் சாப்பிட்டால் கரு கலைந்துவிடும். எனவே எள்ளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். இந்த எள் கருக்கலைப்பு மருந்துகளில் அதிகம் சேர்க்கப்படுகிறது. சுவாசக் கோளாறுகளை நீக்கும்.

(வெட்டுக் காயங்களில் நல்லெண்ணெய் பட்டால் தேவையற்ற சதை வளரும். அதனால் காயங்களில் நல்லெண்ணெய் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரவத்தங்கம் ஒலிவ் எண்ணெய்....

இன்று உலகம் முழுவதும் உடலுக்குத்தீங்கு விளைவிக்காத நல்ல கொழுப்புக்கு (Healthy Fat) பெயர்போன ஒன்றாக ஒலிவ் எண்ணெய்(Olive Oil) இருக்கின்றது. இந்தஎண்ணெய் மற்றைய எண்ணெய்கள்போல ஒருசில நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாவனைக்கு வந்தஒன்றல்ல. இது கிறிஸ்துவுக்கு முன் ஆறாவது புத்தாயிரம் ஆண்டிலிருந்து (6th Millenium) பாவனையில் உள்ளது. ஒலிவ் எண்ணெய் பாவனைக்கு வந்த காலத்திலிருந்து அது உணவுத் தேவைக்கு மட்டும் பயன்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை. வைத்தியத்துக்கு, அழகு சாதனத் தயாரிப்புக்கு, விளக்கு எரிப்பதற்கு, சமயக் கிரியைகளுக்கு என பல தேவைகளுக்கும் அது பயன்பட்டு வந்துள்ளது. ஒலிவ் எண்ணெயை தலைமுடிக்கு கிரமமாகப் பூசி வந்தால், முடி கருமையாகவும் செழிப்பாகவும் வளரும் என்பதும் நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. கிரேக்கத்திலும், ரோமிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட புராதன மினோன்(Minoan) நாகரீக காலத்து மட்பாண்டங்களில் ஒலிவ் எண்ணெய் சேமித்து வைத்திருப்பதற்காக அவை பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. ஒலிவ் எண்ணெயின் மகத்துவம் பற்றி கிறிஸ்துவுக்கு முன் 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க கவிஞரும்அறிஞருமான ஹோமர் (Homer) வர்ணிக்கையில், அது ஒரு திரவத்தங்கம் (Liquid Gold) எனக் கூறியுள்ளார். இன்று ஏறக்குறைய உலகிலுள்ள எல்லாநாடுகளுமே ஒலிவ் எண்ணெயை உணவுகளுக்குப் பயன்படுத்தினாலும்,மத்தியதரைக் கடல் பிரதேச நாடுகளில்அதைப் பயன்படுத்தி செய்யப்படும் உணவுவகைகளே பிரசித்தமானவை. உலகில் ஸ்பெயின் நாட்டிலேயே அதிகமான ஒலிவ்செய்கை பண்ணப்பட்டாலும், மத்தியதரைக் கடல் பிரதேச நாடுகளில்தயாராகும் ஒலிவ் எண்ணெய்க்கே மவுசும் அதிகம். ஒலிவ் எண்ணெயில் MonounsaturatedOleic Acid 70%, Saturated Palmitic Acid 13%, Polyunsaturated LinoleicAcid 15% என்ற வகையில் கொழுப்புகள் அடங்கியுள்ளன. இதில் அடங்கியுள்ளஅமிலங்கள் கொலஸ்ரோலைக்கட்டுப்படுத்தி, பல விதமான இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களைத் தடுக்கவல்லவை என்பது கண்டறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிவ் எண்ணெய் பயன் அத்துடன் ரகம் 2 நீரிழிவு நோய்உள்ளவர்களுக்கும் ஒலிவ் எண்ணெய் பயன் தரக்கூடியது என்பது ஆய்வின் மூலம்தெரிய வந்துள்ளது. இன்று உலகம் முழுவதும் விற்பனைநிலையங்களில் பலவிதமான ஒலிவ் எண்ணெய்கள் விற்பனைக்கு உள்ளன.அதனால் எந்த ரகத்தை வாங்குவது என்ற குழப்பம் பாவனையாளர்களுக்கு ஏற்படுவதுசகஜம். ஆகையால் அதன் தரம் பற்றி அறிந்திருப்பது முக்கியம்.முதலாவதாக, உயிர்ப்புள்ள (Organic) தரத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.இரண்டாவதாக, கூடுதல் தூய்மையானதாக (Extra Virgin) பார்த்து வாங்க வேண்டும். மூன்றாவதாக, குளிரில் பதப்படுத்தியதாக(Cold Processin இருக்க வேண்டும். இவையே சிறந்த ரகஒலிவ் எண்ணெய்கள்.ஒலிவ் எண்ணெயைப் பொறுத்த இன்னொரு முக்கிய விடயம்,

அதை அதிகம் சூடாக்கக்கூடாது. அப்படிச் சூடாக்கினால் அதிலுள்ள நல்ல கொழுப்பின் தன்மை மாற்றமடைந்துவிடும். பொதுவாக சமைத்த உணவுகள், சலாட் வகைகளுக்கு அதை பச்சையாகப் பயன்படுத்துவதே சிறந்தது. மஞ்சள், ஒறேஞ், சிவப்பு நிறங்களுடையபழங்கள், மரக்கறி வகைகளுக்கு ஒலிவ் எண்ணெயைப் பயன்படுத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தகவல் ஆதாரம்:Tonic Masgazine Canada குறிப்பு: இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருக்கும் இலுப்பை என்றமரமும் ஏறத்தாழ ஒலிவ் போன்றதே. இரண்டினதும் இலைகளும், விதைகளும்அண்ணளவாக ஒரே தோற்றமுடையவை.

நமது முன்னோர் இலுப்பெண்ணெயை உணவுத் தேவைகளுக்கும், விளக்கு எரிப்பதற்கும், நோய் தீர்ப்பதற்கும் (பித்த வெடிப்புக்கு அருமருந்து) எனப் பல வகைகளில் பயன்படுத்தி வந்துள்ளனர். இலுப்பைப் பூவையும் சர்க்கரைக்குப்பதிலாகப் பயன்படுத்தி இருக்கின்றனர்.இன்றும் அசல் இல்லாமல் நகலாகஇருக்கும் மனிதர்களுக்கு அல்லதுபொருட்களுக்குஇலுப்பைப்பூ சர்க்கரை போல என்ற சொற்றொடரைப்பயன்படுத்துவதுண்டு. ஆனால் காலப்போக்கில் அதன் மகத்துவம்தெரியாமல் நாம் இலுப்பை மரங்களை அழிய விட்டதுடன், அதன்பாவனையையும் கையை விட்டுவிட்டோம்.அத்துடன் இலுப்பையின் பயன்பாடு பற்றியமுறையான விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளும் இதுவரை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர் பற்றிய முதுமொழி

ஆற்று நீர் வாதம் போக்கும் (மூலிகைகள் கலந்திருப்பதால்). அருவி நீர் பித்தம் போக்கும் (கனிமங்கள் கலந்திருப்பதால்). சோற்று நீர் இரண்டும் போக்கும்

## உன் வாழ்க்கை

உன் சொற்களைக் கொண்டு
உன் உணர்ச்சிகள் மதிக்கப்படும்.
உன் உணர்ச்சிகளைக் கொண்டே
உன் செயல்கள் மதிக்கப்படும்.
உன் செயல்களைக் கொண்டே
உன் வாழ்க்கை மதிக்கபடும்

## சாக்ரட்டீஸ்

ஏங்கல்ஸ் மட்டும் தன்னலமறுப்புடன் எப்போதும் பண உதவி செய்துகொண்டே இருந்திராவிட்டால் மார்க்ஸ் மூலதனம் என்ற நூலை எழுதி முடித்திருக்க முடியாது என்பது மட்டுமல்ல, தவிர்க்க முடியாதபடி அவர் வறுமையால் மடிந்திருப்பார்

## பொன்மொழிகள்.

இருள் இருள் என்று சொல்லிக் கொண்டு சும்மா இருப்பதை விட ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்றி வை.'

'நன்றாக ஆளப்படக்கூடிய நாட்டில் வறுமை என்பது வெட்கப்பட வேண்டிய விடயம். மோசமாக ஆளப்படக்கூடிய நாட்டில் செல்வம் என்பது வெட்கப்பட வேண்டிய விஷயம்.'


'கொஞ்சம் வைத்திருப்பவன் ஏழையல்ல. அதிகம் விரும்புகிறவன் தான் ஏழை.'

'நமக்கு எதையெல்லாம் பிறர் செய்யக்கூடாது என்று நினைக்கிறோமோ, அதையெல்லாம் நாம் பிறருக்குச் செய்யக் கூடாது.'

கன்பூசியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எல்லாம் மாற்றலாம்... போன உயிரை திரும்பப் பெறமுடியுமா.....

மனிதன் விபத்தில் சிக்கியோ அல்லது வேறு ஆபத்துக்களில் விபத்துக்குள்ளாகியோ அல்லது இருக்கும் உடலை மேலும் மெருகூட்டவோ இன்றைய விஞ்ஞான உலகம் வழிவகுக்கின்றது. ஆனால் இழந்த உயிரைத்தான் மீண்டும் உயிர்பெற வழிகண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த உடலுறுப்பு மாற்றி அழகுபடுத்துவதற்காக ஜேர்மனியில் பல பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை முறைகளும் தற்போது கையாளப்படுகின்றதாம். இப்படத்தில் காணப்படும் மனித உடற்பாகங்களை திருத்தி அமைத்து மெருகூட்டி அழகுபடுத்த ஒவ்வொரு உறுப்புக்கும் செலவாகும் பணத்தின் பெறுமதியையும் வெளியீடு செய்துள்ளது ஒரு தனியார் மருத்துவ நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தடி கூந்தலுடன் வாழ்ந்துவந்த அதிசய சிறுமி...

பிரேசிலில் வாழ்ந்துவரும் 14 வயது சிறுமி ஒருவர் பிறந்தது முதல் தலைமுடியை வெட்டாமல் சுமார் 1.6 மீட்டர் நீளத்திற்கு தலைமுடியை வளர்த்துள்ளார்.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் வாழ்ந்து வரும் Natasha Moraes de Andrade என்ற அந்த சிறுமி, பிறந்தது முதலே தலைமுடியை வெட்டாமல் வளர்த்துள்ளார்.

இவர் இவ்வாறு தன் உயரத்திற்கு தலைமுடியை வளர்த்துள்ளதால், மற்றச் சிறுமிகளைப் போல இயல்பாக இருக்கமுடியாததோடு வீட்டிற்குள்ளேயே சிறைபட்டு கிடந்துள்ளார்.

தனது நீண்ட தலைமுடியை பராமரிக்க தினமும் ஒன்றரை மணி நேரங்களை செலவிட வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவர் தனது தலைமுடியை பராமரிக்க பயன்படுத்தும் ஷாம்பூவை வாங்க ஆண்டு ஒன்றுக்கு சுமார் 400 பவுண்டுகள் செலவாகுவதாகவும்,


இது தங்கள் குடும்பத்திற்கு பெரிய செலவாக உள்ளதாகவும் சிறுமியின் தாயார் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிறந்தது முதல் வெட்டாமல் வைத்திருந்த தலைமுடியை சுமார் 4,500 டொலர்களுக்கு விற்கபோவதாகவும், அந்த பணத்தின் மூலம் தனது படுக்கையறையை புதுப்பிக்கபோவதாகவும் கூறியுள்ளார்.

எனினும் தலைமுடி வெட்டுவதன் மூலம், தான் புதிய வாழ்க்கை வாழ்வதை உணர்வார் என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




---

நகவல்கள்.

சீனாவில் 100 வயதைத்தாண்டிய சுமார் 60.000 பேர் இப்பொழுதும் உடலாரோக்கியத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என ஆய்வு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

தென்னமெரிக்க நாடான வெனிசூலா நாட்டில் Big Mac என்ற விரைவு உணவு விசேட உணவு வகைகளில் தயாரிக்கப்பட்டது. ஒன்றின் விலை 43 டொலருக்கு விற்பனையாகி உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரி... சிரி... சிரிப்பு!...

| | |
|---|---|
| ஒருவர்:- | திருமணவீட்டின் ஒலிபெருக்கியில் என்ன அறிவிக்கிறாங்கள். |
| மற்றவர்:- | அதுவந்து...சாப்பிடும் இடத்திலும், செருப்புக் கழட்டும் இடத்திலும் வீடியோ கமராக்கள் பொருத்தப்பட்டிருப்பதால் யாரும் இரண்டு தடவை சாப்பிடவோ, செருப்புக் களவாடவோ முடியாதாம்.. |
| ஒருவர்.- | அப்படி என்றால் நான் அடுத்த திருமணத்திற்குப் போக வேண்டியது தான்!...... |

| | |
|---|---|
| ஒருவர்:- | பெடியனின் குணம் நடை எப்படி.. |
| மற்றவர்:- | அவன் மனது எப்போதும் வெள்ளைதான்.. |
| ஒருவர்:- | அதுதான் அவன் வெள்ளைக்காரப் பெட்டையைக் கட்டினவனாக்கும்!.... |

| | |
|---|---|
| மகன்:- | சாதிகள் இரண்டுதான் என்று நீங்கள்தானே கூறினீர்கள்.. |
| அம்மா:- | அது எழுத்துக்கும், மற்றவைக்கும்.. உனக்கில்லை.. |
| மகன்:- | அப்ப..... அம்மா நீங்கள் வழிபடும் கடவுள் என்ன சாதியம்மா!... |

| | |
|---|---|
| ஆசிரியர்:- | குமரன் தடியுடன் வந்தான்...இது..இறந்தகாலமா.. நிகழ்காலமா...எதிர்காலமா!... |
| மாணவன்:- | கெட்டகாலம்!...... |

| | |
|---|---|
| மனைவி:- | குடி...குடியைக்கெடுக்கும் என்று மேடையில் விளக்கமாகப் பேசிப்போட்டு இப்ப... |
| கணவன்:- | அது குடிமக்களுக்கு...எனக்கில்லை..அந்தப் போத்தலையும் கிளாசையும் எடுத்துவாரும்!.... |

| | |
|---|---|
| குமரன்:- | காதலித்துவிட்டுத் திருமணம் செய்வதுதான் சிறந்தது. |
| கீதன்:- | இல்லை..திருமணம் செய்துபோட்டுக் காதலிப்பதுதான் நல்லது |
| பாமினி:- | அப்ப இருவரும் ஏன் டைவோஸ் எடுத்தனீங்கள்!.... |

(அன்பான வாசகர்களே!... நீங்கள் சிரித்து மகிழ்ந்த நகைச்சுவைகளை எமக்கு அனுப்பி வையுங்கள் ஏனையவர்களும் சிரித்து மகிழ்வார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ்டீனும் சேர்ச்சிலும்..

அப்பிள் மரம்: – –

ஒருமுறை விஞ்ஞானி ஐஸ்டீன் வாக்கிங் போய்க்கொண்டிருந்தார். வழி எங்கும் அப்பிள் மரங்கள் இருந்தன. ஒரு மரத்தில் மட்டும் பழங்கள் இல்லை. வியப்படைந்த ஐஸ்டீன் அருகில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவனை அழைத்து "ஏன் அந்த மரத்தில் மட்டும் அப்பிள் பழம் பழக்கவே இல்லை" என்று கேட்டார். சிறுவன் அவரைப் பார்த்துத் தயங்கினான். விஞ்ஞானி சிறுவனின் கையில் 5 டொலர்களைக் கொடுத்து மீண்டும் கேட்டார். சிறுவன் மீண்டும் தயங்கினான். விஞ்ஞானியால் ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் பத்து டொலர் கொடுத்து " ஏன் அந்த மரத்தில் அப்பிள் பழம் இல்லை"? என்று கேட்டார். பணத்தைக் கையில் வாங்கிக்கொண்ட சிறுவன் "ஏன் என்றால் அது அப்பிள் மரம் இல்லை" அது பைன் மரம் என்று சொல்லிவிட்டு ஓட்டமெடுத்தான்.


விபத்து: –

வாழ்க்கையில் எவ்வளவோ கஸ்டங்களும் துயரங்களும் வந்த போதும், அவற்றை ஒரு பொருட்டாக எண்ணிச் சோர்ந்துவிடாது துடிப்புடன் செயலாற்றி சாதனை படைத்தவர் பிரிட்டிஸ் பிரதமர் வின்ஸன் சேர்ச்சில். ஏழாவது வயதில் பள்ளியில் சேர்ந்த அவரை, சரியாகப் படிக்காத காரணத்தால் ஆசிரியர் தினமும் அடிப்பார். ஒரு முறை அவர் ஆசிரியரிடம் வேண்டிய பிரம்படியால் நிமோனியாக் காய்ச்சல் வந்து செத்துப் பிழைத்தாராம்.

தனது 18வது வயதில் பாலம் ஒன்றில் தலைகுப்பிற விழுந்து, தலையில் அடிபட்டு மூன்று நாட்கள் மயக்கமாகக் கிடந்தார். 24ம் வயதில் மாடிப்படியில் தவறி விழுந்து அவரது தோள்ப்பட்டை எலும்பு முறிந்துவிட்டது. 30வது வயதில் விமான விபத்தில் உயிர் பிழைத்தார். 48வது வயதில் குடலில் அறுவை சிகிச்சை செய்து கட்டி ஒன்று அகற்றப்பட்டது. ஒரு சமயம் இவர் காரில் பயணம் செய்தபோது விபத்து ஏற்பட்டு, கை எலும்பு முறிந்தது. ஒரு சமயம் இவர் வீட்டில் வழக்கி விழுந்து முதுகில் ஒரு எலும்பு முறிந்தது. மறுபடியும் ஒரு சமயம் கார் விபத்தில் கால் முறிந்தது. இத்தனை விபத்துக்களிலும் தப்பித்தான் இங்கிலாந்து நாட்டின் சரித்திரத்தில் அதிசயங்கள் பல நிகழ்த்திக் காட்டினார் வின்ஸன் சேர்ச்சில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடலின் மேல் நீர்மட்டத்திலிருந்து அதிகூடிய ஆழத்தில் வசிக்கக்கூடிய மீனினங்கள்.ஒரு சில மீனினங்கள் சுமார் 2 கிலோமீட்டர் கடல் ஆழத்தில் வசிக்கக்கூடியவை என ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது

| | |
|---|---|
| சூரை மீனினங்கள் | - 1015 மீட்டர் |
| ஆமையினங்கள் | - 1280 " |
| வெள்ளைச்சுறா இனங்கள் | - 1280 " |
| திருக்கை இனங்கள் | - 1396 " |
| திமிங்கல இனங்கள் | - 1926 " |
| கடல்யானை இனங்கள் | - 2388 " |
| ஒருவகை திமிங்கல இனம் | - 2250 " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினங்கள் பற்றிய தகவல்கள்....

1. புயல் வருமுன் நண்டுகள் கடலில் இருக்காது கரைக்கு வெளியேறிவிடுகின்றன.
2. கிளி ஓராண்டுக்கு ஒரு முறைதான் முட்டையிடும்.
3. சிலந்திக்கு எட்டுக் கண்கள் உண்டு.
4. அதிக நீர் குடிக்கும் பறவை புறா.
5. பித்தப்பை இல்லாத உயிரினம் எலி.
6. எருமைக்குக் கீழ் வரிசையில் மட்டுமே பற்கள் உண்டு.
7. கூடு கட்டிவிட்டு வெளியே வாழ்க்கை நடாத்துவது தேனீ.
8. கொம்பில் கண்ணுள்ள பிராணி நத்தை.
9. கழுத்து இல்லா கடல் இனம் மீன்.
10. வெட்டுக்கிளிக்கு ஐந்து கண்கள் உண்டு.


# கிளி

கிளி ஒரு அழகான பறவை. இது பல நிறங்களில் உண்டு. இது பழங்களை விரும்பி உண்ணும். இதை செல்லப் பிராணியாக வீட்டில் வளர்ப்பார்கள். சிறுவர்கள் கிளிமீது மிகவும் ஆசைப்படுவார்கள். காய்கறி மற்றும் பழத்தோட்டங்களில் காலை மாலை வேளைகளில் அதிகமாக இதைக் காணலாம். கிளிகளின் அழகையும் அவற்றின் கீச்...கீச் என்ற சத்தங்களையும் நான் விரும்பி ரசிப்பேன். சிலர் கிளிகளைப் பிடித்து கூண்டில் அடைத்து வீட்டில் வளர்ப்பார்கள். நன்கு பழக்கப்பட்ட கிளிகள் மனிதரைப் போல் கதைககூடியவையே. எனவே இந்தச் செல்லப் பிராணிமீது எனக்கு நல்ல விருப்பம்.....

செல்வி.பியூ லிகா
றீத் மிஷன் – கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பணம் பத்தும் செய்யும் ஆனால்!.....

பணம் பந்தியிலே.. குணம் குப்பையியே!...பணமில்லாதவன் பிணம்!.. என்றெல்லாம் நம் கவிஞர்கள் பாடிச்சென்றது ஒரு புறமிருக்க இன்றைய உலகில் மனிதன் பணத்திற்காக நாயாப் பேயாய் அலைகிறான். பண ஆசையால் பெற்றவர்கள் உறவுகளிடையேயும் பாரிய விரிசல்கள் வளர்ந்து வருகின்றது. இங்கு விடையம் என்ன வென்றால் பணம்..பணம்.... என இன்று காரியாலயங்களிலும் ஏனைய கணனித் தொழில்நுட்பங்கயோடும் பலர் பத்து மணித்தியாலங்களுக்கும் அதிகமான நேரம் ஒரே இடத்தில் இருந்து வேலைகளைச் செய்கிறார்கள். இவற்றைவிடப் பலர் பல மணி நேரங்கள் கணனிகயோடு ஒன்றாகி கணனி இல்லாவிடின் சரணம் என்ற நிலையாகிவிட்டது.

இப்படி இவர்கள் நீண்டநேரம் கணனிகளோடு இருப்பதால் பல வியாதிகள் வந்து விரைவாக ஆயுளைமுடித்துவிடும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக புற்றுநோய், நீரழிவுநோய், இதயநோய், முள்ளந்தண்டு நாரிப்பிடிப்பு நோய் பக்கவாதம், மூளைநோய் போன்றவை விரைவாக வந்துவிடும் என்று தெரிவிக்கின்றார்கள். ஆகவே நீங்களும் இவ்விடையம் பற்றிச் சிறிது அக்கறை எடுத்தால் நல்லது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Spitzenreiter**
Deutschland weist im Vergleich mit den anderen EU-Staaten die geringste Arbeitslosigkeit unter Jugendlichen und jungen Erwachsenen auf und belegt damit den ersten Platz. Weil in manchen südlichen Krisenstaaten der EU rund die Hälfte der jungen Menschen ohne Job sind, kommen immer mehr nach Deutschland und suchen hier ihr Glück. Deutschkurse für Ausländer sind nahezu ausgebucht

# வேலையில்லாதோர்!.......

இன்றைய உலகில் சனப்பெருக்கம் பெருகி வருவதாலும் விஞ்ஞான கண்டுபிடிப்புக்களாலும் போர் அழிவுகளாலும் வேலையில்லாதோர் தொகை என்றுமில்லாத வகையில் அதிகரித்து வருகின்றன. பல வறிய நாடுகளில் ஒரு வேளை உணவுக்கே வழியில்லாமல் பசிபட்டினியோடு மனித வாழ்வு நகர்கின்றது.

இப்படத்தில் ஐரோப்பிய நாடுகளில் 15 - 24 வயது இளவயதினரின் வேலையில்லாதோர் பட்டியலையே காண்கிறீர்கள். ஐரோப்பாவிற்குள் வேறுபல நாட்டவர்கள் குடியேறுவதாலும் அகதிகள் வரவில் அதிகரிப்பு ஏற்பட்டும் வேலையில்லாதோர் தொகை நாளுக்குநாள் அதிகரித்துவருவதாக ஐரோப்பிய யூனியன் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. படித்துப் பட்டம் பெற்ற இளம் சமூகம் இன்று வேலையில்லாதோர் நெருக்கடியில் அகப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Chance für Alle Arbeit für Alle Bio ist Qualität

## Massentierhaltung macht Menschen krank Menschen und Tiere brauchen grünes Leben.

## Liebe Bremerinnen und Bremer, Euer Kandidat, Keerthi Kulanayagam, wird folgende politische Ziele verwirklichen:

1. eine gesunde Ernährung: Dazu gehört, dass in Kitas, Schulen, Krankenhäusern und Kantinen immer mehr Nahrungsmittel aus dem ökologischen Landbau angeboten werden. Auch die dort verwendeten tierischen Erzeugnisse sollten nicht aus der Massentierhaltung, sondern aus einer artgerechten Tierhaltung kommen – also keine industrielle Fleischproduktion! Der Respekt vor Mensch und Tier verlangt, dass wir langfristig (bis 2020) die Nahrungsmittelproduktion auf Bio-Tierhaltung und ökologischen Landbau umstellen.
2. Weiterentwicklung der dualen Studiengänge
3. Unterstützung der Weiterentwicklung einer nur auf Schiffbau- u. Fischereiwirtschaft ausgerichteten Wirtschaft hin zu einer breiteren Diversifizierung neuer Geschäftsfelder

## Unsere Gemeinsamen Ziele

Daher Unterstützung aller kleinen und mittelständigen Unternehmen in ihrem Bemühen, eine diversitätsbewusste Unternehmensphilosophie zu entwickeln

4. Arbeit für alle! Alle sollen die Chance erhalten, sich für einen Job zu qualifizieren (=Ausbildung) Mehr Jugendliche sollen zum Schulabschluss geführt werden . Nach dem Schulabschluss soll jeder Jugendliche nach Möglichkeit eine Ausbildungsplatzgarantie haben, um sein Potential entfalten zu können. Eine Jugendberufsagentur wäre dafür hilfreich.
5. Arbeit – statt Arbeitslosigkeit finanzieren!
6. Arbeit und Bildung sind zwei entscheidende Voraussetzungen für ein Leben in Selbstbestimmung .
7. Erwerbstätigkeit ist ein Motor für den Integrationsprozess. Deshalb ist der Zugang zum Arbeitsmarkt wichtig. So können Sie mich erreichen

Mailadresse: keerthi.kulanayagam@gruene-bremen.de
Internetseite : www.keerthi-fuer-uns.de
Auf Facebook: keerthi nayagan
Telefon: 01521 789 7000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனி பசுமைக்கட்சியின் வேட்பாளர்



எதிர்வரும் 10.05.2015 தேதி அன்று நடைபெறவிருக்கும் ஜேர்மனி-பிறீமன் மாநில (Bremen) பாராளுமன்ற பொதுத் தேர்தலில் பசுமைக்கட்சியின் சார்பில் ( Green Party ) தமிழ் இளைஞர் ஒருவர் போட்டியிடுகின்றார். இலங்கை சங்கானையைப் பிறப்பிடமாகவும் நொத்தாரிசும் சட்டத்தரணியுமான சிவஞானம் சோமசுந்தரம் அவர்களின் பேரனும் ,நொத்தாரிசும் பத்திரிகையாளரும் பசுமைவளத்திட்ட ஆர்வலருமான பிறீமன் நகரில் வசிப்பவருமான திரு.திருமதி சோம குலநாயகம் தம்பதிகளின் புதல்வருமான கீர்த்தி குலநாயகம் அவர்கள் போட்டியிடுகின்றார்.

இவர் பிறீமன் நகர ஜேர்மன் உயர் கல்லூரியின் பழைய மாணவரும் பட்டதாரியுமாவர். இவர் கல்வியிலும் அரசியல் பொருளாதாரத்துறையிலும் கடந்த பத்து வருடங்களுக்குமேலாக இக்கட்சியினருன் சேர்ந்து வேலை செய்து வருகின்றார். இவை மட்டுமல்லாமல் ஜேர்மன் மற்றும் இலங்கை மாணவர்களுக்கு உதவும் பணிகளில் நீண்டகாலமாக உழைத்து வருகின்றார்.எனவே இவர் வெற்றிபெற்று சகல இனமக்களுக்கும் சேவை செய்யவேண்டும். இலங்கைத் தமிழன் புலம்பெயர் நாட்டிலும் அரசியல் உரிமைகளுடன் வாழவேண்டும் எனவாழ்த்துவோம்...

பிறீமன் நகர வாக்காளப் பெருமக்களுக்கு இவர் ஒரு அன்பான வேண்டுகோளை விடுத்துள்ளார். வாக்காளர் ஒவ்வொருவருக்கும் 5 வாக்குகள் இருக்கின்றன. இந்த ஐந்து வாக்குகளையும் தனக்கு அளித்தால் தானும் வெற்றிபெறுவதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளார். எனவே உங்கள் பொன்னான வாக்குகளை மண்ணாக்காமல் உங்கள் தமிழ்வேட்பாளருக்கே அளித்து அவரை வெற்றிபெற வைத்து தமிழனின் பெருமையை உலகறியச் செய்யும் வண்ணம் அன்புக்கட்டளையிட்டுள்ளார் தங்கத்தமிழ் வேட்பாளர் திரு கீர்த்தி அவர்கள். வெற்றிபெற நாமும் வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். செல்லப்பா மார்க்கண்டு



பிறப்பு:
06 - 04 - 1934

இறப்பு:
23 - 01 - 2015

## 200-00 யூரோ

யாழ். ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி டியூஸ்பேர்க்கை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்லப்பா மார்க்கண்டு அவர்கள் 23-01-2015 அன்று காலமானார். மண் சஞ்சிகையின் வாசகராகிய அன்னாருக்கு எங்கள் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் இறந்த 31வது நாள் அந்தியேட்டிக்கிரிகையையொட்டி அவரது மகளான திருமதி ரோகினி.இரத்தினசிங்கம் அவர்கள் தாயக ஆதரவற்றோர் நிதிக்காக 200-00 யூரோக்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்த அன்பு உள்ளத்திற்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இந்தக் குடும்பத்தவர்களின் பெருமனதைப் பாராட்டுகின்றோம். இவர்களைப்போல் நீங்களும் உதவலாம். மனமுண்டானால் இடமுண்டு... சிறுதுளி பெரு வெள்ளமாகட்டும்!........

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா) - 480-00 யூரோ
02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு -மட்டக்களப்பு - 480-00 யூரோ
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி-சுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - கிளிசொச்சி - 480-00 யூரோ
04. செல்வன்.நகுல்.துரையரங்கன - ஜேர்மனி.
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - திருகோணமலை- 480-00 யூரோ
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - திருகோணமலை- 480-00 யூரோ
07. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு -வவுனியா - 480-00 யூரோ
08. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு -மட்டக்களப்பு) - 240-00 யூரோ
12. செல்வி.சுகிர்தா.தவராஜ் - ஜேர்மனி
((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 100-00 யூரோ
13. செல்வன்.சியாந்த்.எமில்.சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - வவுனியா - 200-00 யூரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

| | | |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு 30.01-2015 | | +1326-49 |
| அன்பளிப்புகள்:- | | |
| 01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | - Duisburg | + 80-00 |
| 02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | - Duisburg | + 40-00 |
| 03. திருமதி. பராசக்தி. பரமாமி (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | - London | + 40-00 |
| 04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு) | - Essen | + 40-00 |
| 05. திருமதி பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு) | - Weeze | + 120-00 |
| 06. செல்வன் சியாந்த் எமில் சர்வானந்தன் (ஆதரவற்றசிறார் ஒருவரின் வருடாந்த கல்விச்செலவு அன்பளிப்பு) | - Bleiskastel | + 200-00 |
| 07. திருமதி.றோகினி இரத்தினசிங்கம்-தந்தையார் நினைவு அன்பளிப்பு | - Duisburg | + 200-00 |
| 08. திருமதி றஞ்சனா தவராஜ் (ஆதரவற்றசிறார் ஒருவரின் வருடாந்த கல்விச்செலவு அன்பளிப்பு) | - Wadgassen | + 100-00 |
| 09. திருமதி விவேகானந்தன் (கணவனாரின் 31வது நாள் நினைவுநாள் அன்பளிப்பு) | - Switzersland | + 50-00 |
| 10. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் | - Pfrozheim | + 20-00 |
| - | | ------- |
| - | | 2216-49 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ 2216-49

அனுப்பியது: -

| | | |
|---|---|---|
| 1- ஸ்ரீ சண்முகா மகளிர் இல்லம் - திருகோணமலை | - 480-00 | |
| 2- ரூத் மிஷன் சிறுவர் இல்லம் - கிளிநொச்சி | - 500-00 | |
| 3- ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் - வவுனியா | - 700-00 | |
| வங்கிக்கட்டணம் 3 x 35-00 | - 105-00 | |
| | ------- | |
| | - 1785-00 | -1785-00 |
| | | ---------- |
| 15.03.2015 ல் மீதி கையிருப்பு | | + 431-49 |
| | | -------- |

*E.Mail - 23.03.2015*

RUTH MISSION
No 74,Jeyapuram north - Kilinochchi
E mail: jeyaratnam@ymail.com
T.P:0778380254

அன்பின் சிவராஜா ஆசிரியர் அவர்கட்கு
இறை ஆசிகள்.

தாங்கள் அனுப்பிய பணம் 70848/= கிடைத்தது.மிக்க நன்றி. அதற்குரிய பற்றுச்சீட்டும் நன்றிக்கடிதமும் தபாலில் அனுப்பியுள்ளேன். அத்துடன் பிள்ளைகளின் ஆக்கமும் அனுப்பியுள்ளேன். பிள்ளைகளிற்கு பரீட்சை நடைபெறுகின்றது. அனைவரும் நன்றாக படிக்கின்றார்கள். நீங்கள் செய்த உதவிக்கு நன்றி. தொடர்ந்தும் உங்கள் பணி தொடர வாழ்த்துகின்றோம்.
நன்றி

இங்ஙனம்.
Sis Gladys



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RUTH MISSION

Jeyapuram north,
Jeyapuram.

E-mail : g.jeyaratnam@ymail.com.
T.p : 0778380254./ 0213202588

15/01/2015

அன்பின் மண் சஞ்சிகை ஆசிரியர் திருநிறைவாளன் அவர்கட்கு
அன்பின் வணக்கம்.

நீங்கள் அனுப்பிய பணம் (2014 வருடாந்த நிலுவைப் பணம்) 70,804 ரூ கிடைத்தது. மிகவும் நன்றி. நீங்கள் அனுப்பும் பணம் தாமதிப்பதால் பிள்ளைகளின் சில முக்கிய தேவைகளை தீர்ப்பதில் மிகவும் சிரமப்படுகிறோம். தயவு செய்து மன்னிக்கவும். கடந்த வருடம் மிகவும் கஷ்டப் பட்டு விட்டோம்.

இவர்கள் மேல் படிப்புகளை படிக்கும் போது அதிக செலவுகள் ஏற்படுகின்றது. மாதாந்தம் Tuition Fees. க்கு ஒரு பாடத்திற்கு 400/ செலவாகின்றது. கருணை உள்ளம் படைத்த உங்கள் நண்பர்களிடம் கூறி உதவி செய்து கொடுக்கும் படி மிகவும் தாழ்மையுடன் தயவாக கேட்கிறோம்.

பிள்ளைகளின் நன்றிக் கடிதம் மின்னஞ்சலில் அனுப்பி வைக்கிறோம். மண் சஞ்சிகையில் வரும் போட்டிகளில் எமது பிள்ளைகளுக்கு பங்கு பற்ற மிகவும் ஆர்வம். அதனால் எங்கள் சஞ்சிகை பிந்தி வருவதால் பங்கு பற்ற முடியாது கவலைப் படுகிறார்கள். நான் Email எழுதியிருக்கேன். எமக்கு போட்டி விபரங்களை மட்டும் E-mail ல் அனுப்பினால் பிள்ளைகள் பங்கு பெற முடியும். (2014 - புரட்டாதி - ஐப்பசி மாத இதழ்கள் எங்களுக்கு 2015 தைமாதம் தான் கிடைத்தது).

"வெள்ளி விழா கொண்டாடும் மண் சஞ்சிகைக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்."

நன்றி.

இங்ஙனம்,
அன்பின் சகோதரி.
Sis. Gladys. Jeyaratnam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்
## SRI AGILANDESHWARY ARULAHAM

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில்

ARULMIGU AGILANDESHWARY SAMETHA AGILANDESVARAR THIRUKOVIL

"May we protect tender hearted children with compassion"

Vavuniya, Sri Lanka
T.P. 0094 024 - [illegible]
Email: [illegible]

Banker: Bank of Ceylon - Vavuniya, A/C No 0002 [illegible]4895 Reg No NEP/PCC/CH/125

Patrons
Mr.S.Tolyagarasa, President,
Hony.President
Mr.M.Sabanathan
Hony.Vice President
Mr.S.Sathyamoorthy
Hony.Secretary
Mr.A.Navaratnarajah
Hony. Asst.Secretary
Mr.V.S.Thevarajah
Hony. Treasurer
Mr.S.Annalingam
Committee Members
Mr.P.Murugaraj
Mr.S.Sripathynathan
Administrator

January 25, 2015

திரு.V.சிவராசா அவர்கட்கு,

மண் சஞ்சிகை, ஜேர்மனி.

ஐயா வணக்கம்,

**சிறார்களின் பராமரிப்பு நிதி உதவி**

இல்லத்தில் பராமரிக்கப்படுகின்ற சிறுமிகளான அபிராமி, தாட்சாயனி, சத்தியா, ஆரணி ஆகிய நால்வரின் பராமரிப்பு செலவை தங்கள் சஞ்சிகை வாசகர்கள் பொறுப்பெடுத்து பணம் அனுப்பிவைத்து செய்துவருகின்றமைக்கு மிக்க நன்றி.

மேற்படி நான்கு சிறுவர்களின் பராமரிப்பு செலவாக தாங்கள் இம்முறையும் அனுப்பி வைத்த பணம் ரூபா 500 யூரோ (76,895/-) நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

அபிராமி, தாட்சாயனி, சத்தியா, ஆரணி உட்பட அனைத்து சிறார்களும் நலமாகவுள்ளனர். இத்துடன் பணத்திற்கான பற்றுச்சீட்டும், அகிலாண்டேஸ்வரி [illegible] பிரசாதமும் அனுப்பி வைக்கின்றோம்.

தங்களின் தொடர் உதவிக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். தாங்களும் பணம் அன்பளிப்பு செய்துவரும் அன்பர்களும் நலமாக வாழ அகிலாண்டேஸ்வரி [illegible] அருள்புரிவாளாக.

நன்றி

இங்ஙனம்

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RECEIPT

**SRI AHILANDESWARY ARULAHAM**
Kovilkulam (Home for the orphans)
Vavuniya T.P : 024 2221685

No. 11434
Date: 2 [illegible] /10/2015

Received with thanks from Mr. Y. [illegible]
Address [illegible]
the sum of Rupees Seventy Six Thousand Eight Hundred and Ninety Five Cts 95/50
on account of [illegible]
Name of Bank ........ Branch ........ Cheque No ........
Dated ........

**SRI AHILANDESWARY ARULAHAM**

50 Euro

CASH / CHEQUE Rs. 76895/50

Bank of Ceylon

........ Manager

---

# Ruth Mission

No. 74, Jeyapuram North,
Kilinochchi

No. 052 15/12/2015

Received with Thanks the Sum of Rupees Seventy Thousand Eight Hundred and Four Rs only

From Mr. V. Sivarajah

On Account of Donation

Rs: 70804/-

Director/Manager



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அஞ்சலி!

தோற்றம்
17.09.1953



மறைவு
08.03.2015

அமரர் கிறிஸ்த்தோபர் பிரான்சிஸ்
(கி.பி.அரவிந்தன்,சுந்தர்)

அன்புக்கினிய தோழரே!

தங்களின் துயரச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். இச்செய்தியை உறுதிசெய்ய பல மணிநேரமாச்சு. முதன் முதலில் நாம் சந்தித்த நாளை நினைத்துப் பார்க்கிறோம். இப்போதென்பதுபோல் இருக்கிறது. இலங்கையின் மூத்தபத்திரிகையாளர் திரு எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்கள் யேர்மனிக்கு வந்திருந்தபோது அவரைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தீர்கள். ஏற்கனவே தங்களைப் பற்றி அறிந்திருந்தாலும், நேரில் சந்தித்தது அன்றுதான். அடுத்தவருடன் பழகும் சிறப்பும், இலக்கிய ஆளுமையும், கவர்ச்சியற்ற கருத்தாளம், மிக்க உரையும், அன்போடு சிரித்துப்பழகும், பண்பும் எம்மை வெகுவாகக் கவர்ந்திருந்தது. எங்களின் சேவைகளைக் கேட்டறிந்து பாராட்டியதுடன், அனைவரும் ஒருமுறை சேர்ந்து கதைப்போம் என்றீர்கள். அந்தச் சந்தர்ப்பம் ஏற்படாமலே போய்விட்டது.

தமிழ் இலக்கிய உலகத்திற்கு பலபுத்தகங்களை எழுதி வெளியிட்டதுடன், "அப்பால்தமிழ்" "புதினப்பலகை" "இணையங்களிலும் தங்கள் இலக்கியச் சுவையைச் சுவைத்திருக்கிறோம். பலபேரின் நூல்கள் வெளிவர காரணமாக இருந்திருக்கிறீர்கள். சிறு வயதிலேயே அரசியலில் ஈடுபட்டு இரண்டு முறை சிறைசென்று பல துன்பங்களை அனுபவித்தீர்கள். வாழ்க்கையின் பெரும் பகுதி அதற்காகவே வாழ்ந்திருக்கிறீர்கள்.

அருமைத்தோழரே! பிறப்பும், இறப்பும் இயற்கையானது. மறு பிறப்பு என்பது நம்ப முடியாதது. இறந்த பின்பும் வாழ்கின்ற சிலரோடு நீங்களும் இருப்பீர்கள். இன்று தங்களின் இழப்பால் துயர் உறும், அன்பான மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இரங்கலையும், தங்களுக்கு எங்கள் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தலைவர் திரு வ.சிவராசா — செயலாளர் பொன்.புத்திசிகாமணி

யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம்
13.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் நிறைந்திருக்கும் அறவழி ஜீவா அண்ணா 1946-2013



அறவழிப்போராட்டகுழுவின் செயலாளராக,சிறந்த நிர்வாகியாக அனைவருக்கும் (jeeva) அண்ணா என அறிமுகமானவர் ஜீவா அண்ணா ஆனால் ஊடகத்துறையுடன் நெருங்கிய தொடர்பும், பங்களிப்பும் உடையவர். 1985-ல் அமெரிக்காவில் ஊடகத்துறை பயிற்சியை முழுமையாக பூர்த்தி செய்தவர். சுயாதீன ஊடகவியலாளராக செயற்பட்டவர்.

பிரான்ஸிலிருந்து வெளியான பாரிஸ் ஈழநாடு, ஈழநாடு(யாழ்ப்பாணம்) வலம்புரி, வீரகேசரி, தினகரன்,வீக்கென்ட் எக்ஸ்பிரஸ் ஆகிய பத்திரிகைகளின் செய்தியாளராக பணியாற்றினார் ∴ வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளராக பணிசெய்தவர். 2001-ல் சிறந்த ஊடகவியலாளருக்கான விருது பெற்றார்.அறவழி,சாவாலயன் அறவழிசெய்திமடல் NVDAG report ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக பணியாற்றியவர்

2000-ஆம் ஆண்டில் சமூக சேவையாளருக்கான சர்வோதய விருது இவருக்கு வழங்கப்பட்டது. புதிய சமுதாய வெளியீட்டகம் மூலம் அறிவியல் சார்ந்த பல பிரசுரங்களை வெளியிட்டு வந்தவர். 1970காலப்பகுதியில் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் வ.ந.நவரத்தினத்தோடு இணைந்து சமூக பணிகள் பலவற்றை மேற்கொண்டார். எம். பியின் செயலாளராகவும் இருந்தார். 1974-ல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழராய்ச்சி மாநாட்டு பணிகளில் தொண்டராக பொறுப்பேற்று சிறப்புடன் பணியாற்றி எல்லோராலும் பாராட்டப் பட்டார் 1977தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளராக பணியாற்றினார் 1979 அறவழிப்போராட்ட குழுவின் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கும் வரை 2013 அவரே செயலாளராக செயற்பட்டார். பல உலக நலன்புரி அமைப்புகளோடு சந்திப்புகள்,கலந்துரையாடல்களை நடத்தி அறவழிப்போராட்ட செயற்பாடுகளை விரிவடைய செய்தார்.

2001-ல்சிறந்த ஊடக வியலாளருக்கான விருது பெற்றார். அறவழி,சாவாலயன், அறவழி 981-பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, பெல்ஜியம், நெதர்லாந்து, சுவிஸ ர்லாந்து, இத்தாலி, பின்லாந்து, நோர்வே,,டென்மார்க்,ஈக்குவடோர்,இந்தியா,தாய்லாந்து,பாங்கொக் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள தன்னார்வ தொண்டர் நிறுவனங்களைச்சந்தித்தார்.

அறவழிபோராட்டக்குழுவிற்கு அவற்றோடு உறுப்புரிமை பெற்றுகொடுத்தார். 1983-தென்னிலங்கையில் இனக்கலவரத்தால் பாதிக்கபட்டவர்களுக்கு கைதடியில் அடைக்கலம் அளித்து அறவழிப்போராட்டக்குழுவின் சார்பில் பராமரித்தார். இரண்டு வருட பராமரிப்புக்கு பின் தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் கெற்பேலி, மறவன்புலோ ஆகிய இடங்களில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு உந்து சக்தியாக இருந்தார். 1984-wri அமைப்பு லண்டணில் நடத்திய பயிற்சிப் பட்டறையிலும், 1985-அமெரிக்கா பிடெல்பியா மாநிலத்தில் m.n.s (movement for new society) நடத்திய பயிற்சிப் பட்டறையிலும் கலந்து கொண்டார். அமெரிக்காவில் தங்கியிருந்த காலத்தில் தியான முறை தொடர்பிலான் பயிறசியும் பெற்றார். நாள் தவறாது நாட்குறிப்பு எழுதுவார். அமெரிக்கா பயணக்கட்டுரை உட்பட பலவற்றை எழதியிருந்தார்.கையெழுத்து பிரதிகளாகவே அவை இருந்தன.

அவரது கையில் எப்பொழதும் பாய்க் ஒன்று இருக்கும் அதற்குள் புத்தகம்,குறிப்பெழதும் கொப்பி போன்றவை இருக்கும். புத்தகங்கள் நிறைய வாசிப்பார் யாழ்.நகரம், கொழும்பு, இந்தியா செல்லும் போதெல்லாம் புத்தகங்களுடன் திரும்புவார் . தமிழில் மட்டுமல்ல ஆங்கில புத்தகங்களும் வாசிப்பார். நூலகத்தை கோயிலாக நினைப்பார். தனது வீட்டில் அழகான நூலகம் வைத்திருந்தார். அறவழியில் பொதுநூலகம் ஒன்றையும் நடத்தினார். சாவகச்சேரியில் தனிமனிதனாக நின்று நூலகம் நடத்தியவர். 2013பெப்02இல் எம்மைவிட்டுபிரிந்த அறவழிஜீவனின் இரண்டாவது நினைவதினம் 2015பெப்02ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்தந்தைக்கு அஞ்சலிகள்..



பிறப்பு:-19.05.1927 மறைவு:-16.03.2015

யேர்மனியின் தமிழ் கல்விக் கழகத்தின முன்னாள் பொறுப்பாளர் திரு.இரா. நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள் 16-03-2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். யேர்மனியில் தமிழை வளர்ப்பதற்கு நாட்டில் 130 மேற்பட்ட தமிழாலயங்களை உருவாக்கி புலம்பெயர் தேசத்தில தமிழ் மொழி, பண்பாடு கலை, கலாச்சாத்தை வளர்த்தமைக்காக தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் தாயகத்திற்கு வரவழைக்கப்பட்டு அவரின் பணிக்காக மதிப்பளிக்கப்பட்டிருந்தார் என்பது நினைவூட்டத்தக்கது. மாற்றான் போற்றும் பண்பாளன் இரா.நாகலிங்கம் ஐயா அவர்கள் - தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஜேர்மனியில் தமிழைப் பேணிப் பேணி வளர்த்த ஆசான். தமிழ்க் கல்விக் கழகத்தினைக் கட்டிக்காத்த தந்தை. மாற்றான் போற்றும் பண்பாளன். பல்லாயிரம் தமிழாலயக் குழந்தைகளின் தாத்தா இரா.நாகலிங்கம் ஐயா என தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது.

1989ம் ஆண்டு ஜேர்மனியில் ஆரம்பிக்கப்படட ஜேர்மன் தமிழ்க்கல்விச்சேவையில் இணைவோடு அன்னாரின் ஜேர்மனிய கல்விப்பணி ஆரம்பித்து தமிழாலயங்களின் ஆரம்பகர்த்தாவாச் செயற்பட்டு சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் ஜேர்மனியில் கல்விப்பணியை சீருடனும் சிறப்புடனும் மேற்கொண்டு வந்துள்ளார். இந்தப் பெருமகன் இறுதிவரை தமிழக்காகவும் தமிழ்ச்சந்ததிகளுக்காகவும் ஒளிவிளக்காக நின்று செயற்பட்டார். அவர் உடல் மறைந்தாலும் அவர் பணிகள் என்றும் தமிழர் நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு மண் சஞ்சிகையும் வாசகர்களும் இரங்கலைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை மன்றாடுகின்றோம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WISSEN, KULTUR & LITERATUR

ZWEIMONATIGE AUSGABE

HTTP://WWW.MANN-ERDE.COM

# ERDE Mann

2015 GERMANY

AUSGABE 170

## Happy Womens Day






| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 15€ |
| | ஏனைய நாடுகள் | 20€ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org